Registered as a Newspaper பக்கங்கள் 6 விலை ரூபா: 5-00

பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்
நல்லூர் கிளை நூலகம்.

ஈழநாதம்

The Eelanaatham மக்கள் நினசரி Peoples Daily

நாதம் 5 திருவள்ளுவர் ஆண்டு 2025 வைகாசி 21 04-06-1994 சனிக்கிழமை ஓசை 106

# இடம்பெயர்ந்து தெற்கில் வாழும் தமிழருக்கு புதிய அடையாள அட்டை

வடக்கு - கிழக்கு மாகாணங்களில் இருந்து இடம் பெயர்ந்து தென்னிலங்கையின் பல்வேறு பகுதிகளிலும் வாழும் தமிழ் மக்களுக்கு வேறு அடையாள அட்டை வழங்கும் புதிய திட்டம் ஒன்றை ஆட்பதிவுத்திணைக்களம் நடைமுறைப் படுத்த வுள்ளது. இடம் பெயர்ந்து வாழ்பவர்களின் அவசியத் தேவைக்கு பயன் படுத்தவும், சுற்றிவளைப்புத் தேடுதல்களின் போது இவ் அடையாள அட்டையை சமர்ப்பிப்ப தன் மூலம் பொலிசாரினால் கைது செய்யப்படுவதை தவிர்த்துக் கொள்ளவும் இது உதவும் எனத் தெரிவிக்கப்படுகின்றது இதேவேளை நடமாடும் அடையாள அட்டை வழங்கும் செயலக றை விரைவில்

(6ஆம் பக்கம் பார்க்க)

## ஐ.தே.க. அமைப்பாளர் கூட்டத்திற்கு பத்திரிகையாளர் செல்லத் தடை

(கொழும்பு)

ஜனாதிபதி டி.பி விஜேதுங்கா கலந்து கொண்ட ஐ.தே.கவின் மாவட்ட அமைப்பாளர்களுக்கான கூட்டத்தில் செய்தி சேகரிப்பதற்கும், புகைப்படம் பிடிப்பதற்கும் செய்தியாளர்களுக்கு அனுமதி மறுக்கப்பட்டுள்ளது. அநுராதபுரம் மாவட்டத்தில் 'யுவன் நிகேதனய' மண்டபத்தில் ஐ.தே.கவின் மாவட்ட மட்ட அமைப்பாளர்களுக்கான மாநாடு கடந்த திங்களன்று நடைபெற்றது. இம்மாநாட்டில் செய்தி சேகரிப்பதற்காக செய்தியாளர்களும் புகைப்படப்பிடிப்பாளர்களும் கொழும்பிலிருந்து புறப்பட்டு வரும்படி ஜனாதிபதி செயலகத்தால் அழைக்கப்பட்டிருந்தனர். எனினும் அநுராதபுரத்

(6 ஆம் பக்கம் பார்க்க)

## கலந்துரையாடல் இடமாற்றம்

இன்று காலை 9 மணிக்கு யாழ் இந்துக்கல்லூரி குமாரசுவாமி மண்டபத்தில் நடைபெற இருந்த சகல கோயில் நிர்வாக சபையினருடனும், தொழிற்சங்கங்களின் நிர்வாக உறுப்பினர்களுடனுமான கலந்துரையாடல் இன்று காலை 9 மணிக்கு நல்லூர் இளம் கலைஞர் மண்டபத்தில் நடைபெறும். இன்று பி ப.

(6 ஆம் பக்கம் பார்க்க)

## பிரச்சினைக்கு தீர்வு காணாவிட்டால் ஜனாதிபதிதேர்தலில் போட்டியிடுவேன்

### முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் அஷ்ரப் அறிவிப்பு

(கொழும்பு)

ஜனாதிபதித் தேர்தலுக்கு முன் முஸ்லிம் மக்களின் பிரச்சினைக்கு ஏற்றுக் கொள்ளக்கூடிய வகையிலான தீர்வொன்றை முன்வைக்காவிட்டால் ஜனாதிபதி தேர்தலில் முஸ்லிம் காங்கிரஸ் தனித்து நின்று போட்டியிடுவது தவிர்க்க முடியாததாகி விடும் என முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் எம்.எச்.எம். அஷ்ரப் தெரிவித்துள்ளார்,

முஸ்லிம் மக்கள் இன்று பல்வேறு பிரச்சினைகளை எதிர்நோக்குகின்றனர். இதுவரை இது தொடர்பாக

(6 ஆம் பக்கம் பார்க்க)

## அமைச்சருக்கு எதிரான நடவடிக்கை ஒத்திவைப்பு

சிறிலங்காவின் முன்னாள் ஜனாதிபதி ரணசிங்க பிரேமதாசாவின் ஆட்சிக் காலத்தின் போது லஞ்ச ஊழல் மற்றும் அட்டூழியச் செயல்களுடன் தொடர்புடைய அமைச்சர் ஒருவருக்கு எதிராக ஆணைக்குழு நியமிப்பதென்று எடுத்த தீர்மானத்தை ரத்துச் செய்ய ஐ.தே கட்சி அரசாங்கம் முடிவு செய்துள்ளது.

முன்னாள் தலைவர் ஒருவருடன் கடந்த வாரம் ஏற்பட்ட ஒப்பந்தத்தின் படியே மேற்படி முடிவு எடுக்கப்பட்டதாகத் தெரியவருகின்றது

# 4 வருட காலத்திற்குள் 35,000 தமிழர்கள் கைது

## 'மாகோ' தாமதம்

பருத்தித்துறை துறைமுகத்தில் பொருள்களை இறக்கி முடித்த 'றுகுணு' கப்பல் நேற்று பிற்பகல் 3:35 மணியளவில் கொழும்பு நோக்கிப் புறப்பட்டது. இக்கப்பல் மீண்டும் ஆயிரம் மெற்றிக்தொன் சீனியுடன் பருத்தித்துறைக்கு வரும்.

கொழும்பில் மழை பெய்து வருவதினால் 'மாகோ' கப்பலில் மண்ணெண்ணெய் ஏற்றும்வேலைகள் தாமதமடைந்துள்ளன. (யோ)

## இலவச சீருடை விநியோகம் 27-முதல் ஆரம்பமாகும்

(கொழும்பு)

பாடசாலை மாணவர்களுக்கான இலவச சீருடை இம்மாதம் 27 ஆம் திகதி உத்தியோகபூர்வமாக வழங்கப்படும் என்றும் கல்விச் சேவைகள் அமைச்சு அறிவித்துள்ளது.

மேற்படி வைபவத்தை பதுளை மத்திய மகாவித்தியாலயத்தில் ஜனாதிபதி டி. பி. விஜேதுங்கா ஆரம்பித்து வைப்பார் என்றும் அதனைத் தொடர்ந்து இம்மாதம் முடிவதற்கு முன் சகல பாடசாலைகளுக்கும் இவ்இலவச சீருடை வழங்கப்பட வேண்டும் என்றும் இதற்காக தேவையான சீருடைத் துணி வகைகளை கல்வி சேவைகள்அமைச்சில் இருந்து பெற்றுக்கொள்ளுமாறும் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை வடபகுதி பாடசாலை மாணவர்களுக்கான சீருடைத் துணிகள் கொழும்பில் பொதி செய்யப்பட்டு வருவதாகவும், இவை விரைவில் அத்தியாவசிய சேவைகள் ஆணையாளர் அலுவலகத்தின் மூலம் வடபகுதிக்கு எடுத்துச் செல்லப்பட்டு விநியோகிக்கப்பட இருப்பதாகவும் மேலும் கூறப்படுகிறது.

## பிரேமதாசா கொலைக்கு பின்னர் மட்டும் 15,500 பேர் பிடிக்கப்பட்டனர்

[கொழும்பு]

**கடந்த நான்கு வருடகாலத்தில் சிறிலங்கா அரசபடைகளினால் முப்பத்தையாயிரத்துக்கு மேற்பட்ட தமிழர்கள் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டிருந்ததாக வெளிநாட்டு மனிதநேய நிறுவனம் ஒன்று எடுத்த புள்ளி விபரங்களிலிருந்து தெரியவந்துள்ளது.**

இவர்கள் அவசர கால சட்ட விதியின் கீழ் தடுத்து வைக்கப்பட்டிருந்ததாகவும்

இதே வேளை சென்ற வருடம் மே மாதம் ஜனாதிபதி ஆர். பிரேமதாச கொலை

வடக்குக் கிழக்குப் பகுதிகளைச் சேர்ந்த தமிழர்களே பெரும்பாலும் கைது செய்

## பொலிஸ்மனிதஉரிமைமீறல் விசாரிக்க ஆணைக்குழு

### கண்துடைப்பென கண்டனம்

(கொழும்பு)

கடந்த காலத்தில் பொலிசாரால் இழைக்கப்பட்டதாக கூறப்படும் மனித உரிமைகள் மீறல் தொடர்பாக விசாரணை நடத்துவற்கு சுதந்திரமான ஆணைக்குழுவொன்றை அரசாங்கம் நியமித்துள்ளது. ஓய்வுபெற்ற மேல் நீதிமன்ற நீதிபதி ஒருவர் இவ் விசாரணைக் குழுவிற்கு தலைமை தாங்கவுள்ளார். இந்த ஆணைக்குழுவில் இந்த ஆணைக்குழுவின் விசாரணைக்கு உதவலாம் எனவும் இந்த ஆணைக்குழு எங்கிருந்தும் விசாரணைகளுக்கான ஆவணங்களைக் கோரலாம் எனவும் கூறப்படுகிறது,

இதேவேளை எதிர்க்கட்சிகளால் பொலிசாரின் நடத்தை தொடர்பாக பல்வேறு விமர்சனங்கள் முன்வைக்கப்படும் சூழலில் அரசாங்கத்தின் இந்த அறிவிப்பு தேர்தல் காலக் கண்துடைப்பே என

றது;

## சு.க. புதிய செயற்குழு கூட்டம் விரைவில் கூடவுள்ளது

சுதந்திரக்கட்சியின் புதிய செயற்குழுக் கூட்டம் மிக விரைவில் கூட இருப்பதாக கட்சித் தலைமை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

கட்சித் தலைவி சிறிமாவோ பண்டாரநாயக்கா மருத்துவ சிகிச்சைக்காக சிங்கப்பூர் செல்ல இருப்பதால் இது கூட்டப்பட இருப்பதாகவும் இதில் மேலும் உப குழுக்கள் அமைக்கப்பட இருப்பதாகவும் கட்சி வட்டாரங்கள் மேலும் தெரிவித்துள்ளன.

### ஐ. தே. க செயற்குழு உறுப்பினராக

## பிரேமா மகனின் நியமனம் உத்தியோக பூர்வமானதல்ல

(கொழும்பு)

ஐக்கிய தேசியக் கட்சியின் செயற்குழு உறுப்பினராக சஜீத் பிரேமதாச நியமிக்கப்பட்டது தொடர்பாக இன்னமும் உத்தியோக பூர்வமாக அறிவிக்கப்படவில்லை என கட்சி உயர்வட்டாரங்கள் தெரிவித்துள்ளன

இதனால் ஐ.தே. க அங்கத்தவர் சிலர் மிகவும் மனவருத்தம் அடைந்துள்ளதாகவும், இது ஒரு வேளைபோலி அறிவிப்பாகக் கூட இருக்கலாம் என்ற சந்தேகம் நிலவுவதாகவும் தெரிய வருகின்றது

## சந்திரிகாவின் பாதுகாப்பு மேலும் பலப்படுத்தப்பட்டது

(கொழும்பு)

மேல் மாகாண முதலமைச்சர் சந்திரிகா குமாரணதுங்காவின் பாதுகாப்பு மேலும் பலப்படுத்தப்பட்டுள்ளதாகவும் கொழும்பில் இருந்து கிடைத்த தகவல்கள் தெரிவிக்கின்றன-

முன்னர் வழங்கப்பட்ட ஆறு பொலிசாருக்கு மேலாக பதினாறு கொமாண்டோ படையினரையும், பத்து பொலிசரையும் வழங்கி இருப்பது குறிப்பிடத்தக்கது.

## இந்திய அமைச்சர்களுக்கு ஹமீட் நன்றி தெரிவிப்பு

(கொழும்பு)

சிறிலங்கா வெளியுறவு அமைச்சர் ஏ.சி. எஸ். ஹமீட் இந்திய வெளியுறவு அமைச்சர் தினேஷ் சிங் அவர்களுக்கு எழுதிய கடிதம் ஒன்றில் ஏமனில் நிர்க்கதியாகநின்ற இலங்கையரை அங்கிருந்து அப்புறப்படுத்துவதில் இந்திய உதவியமைக்கு நன்றியைத் தெரிவித்துக்கொண்டுள்ளார்,

ஏமனின் பலபகுதிகளில் இருந்து 52 இலங்கை மக்கள் அப்புறப்படுத்தப்பட்டு நிக்கோபர் கப்பலின் மூலம் கடந்த வாரம் பம்பாய்க்கு கொண்டு வரப்பட்டதாக அறிந்தேன். இன்னமும் சில இலங்கையர்கள் ஏமனில் தரித்திருப்பதாக அறிகிறேன், அவர்களையும் பாதுகாப்பாக கொண்டுவர தங்கள் அதிகாரிகள் உதவுவர் என நம்புகிறேன் எனவும் ஹமீட் தனது கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்

சட்ட விதியின் கீழ் தடுத்து வைக்கப்பட்டிருந்ததாகவும் படிப்படியாக இவர்களில் பலர் விடுவிக்கப்பட்டுள்ளதாகவும் மேலும் பல்லாயிரக் கணக்கானவர்கள் தொடர்ந்து தடுத்து வைக்கப்பட்டதாகவும்அப் புள்ளிவிபரத்திலிருந்து மேலும் தெரியவந்துள்ளது.

டம் மே மாதம் ஜனாதிபதி ஆர். பிரேமதாச கொலை செய்யப்பட்டதைத் தொடர்ந்து அவ் வருட இறுதி வரையான காலப் பகுதியில் பதினையாயிரத்து ஐநூற்று எழுபத்தி மூன்று பேர் கொழும்பில் மட்டும் கைது செய்யப்பட்டதாகவும் தெரியவருகின்றது.

## ரஞ்சன் வசித்த வீட்டிற்கு வாடகை வழங்கும் அரசு

(கொழும்பு)

கொழும்பு ஹொட்டன் பிளேசில் முன்னாள் பாதுகாப்பு அமைச்சர் ரஞ்சன் விஜேரத்தினவால் உபயோகிக்கப்பட்டு தற்சமயம் பாவிக்கப்படாத நிலையில் உள்ள வீடொன்றுக்கு மாதாந்தம் வாடகையாக ரூபா 75,000 திறைசேரியினால் வழங்கப்பட்டு வருகிறது.

இது ஏற்கனவே திறைசேரியின் இபார்சின் பேரில் தேசிய கல்விக் கமிஷனுக்கு வழங்கப்பட்டபோதிலும், வெளியுறவு அமைச்சு மத்திய கிழக்கு நாடொன்றின் தூதுவருக்கு வழங்குவதற்காக இரு வாரங்களுக்குள் இதனைக் காலி செய்யவேண்டும் என பணிப்புரை விடுத்தது இதனையடுத்து இது மீண்டும் காலி செய்யப்பட்டது.

தற்சமயம் இந்த பங்களா காலியாகவுள்ளது இதற்கு வருடமொன்றுக்கு 90லட்சம் ரூபா வாடகையாக வழங்கப்படுவது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

## இன்று படகுச்சேவை இல்லை

இன்று கிளாலி—பூநகரி படகுச்சேவை நடைபெறமாட்டாது என அரசியற்துறையினர் அறிவித்துள்ளனர்.

## பொறிகளைப் பயன்படுத்தி மின்சாரம் பெறலாம்

வானொலி, ஒலிபெருக்கிகளையும் குறைந்த வலுவில் இயக்கக்கூடிய கறுப்பு வெள்ளை தொலைக்காட்சிப் பெட்டிகளையும், இயக்கக்கூடிய பொறிகளை தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவன சக்திப்பகுதியினர் உருவாக்கியுள்ளனர். இப் பொறிகள் கைகளினால் அல்லது கால்களினால் அசைத்து இயக்கக்கூடியவை.

இதுவரை காலமும் மின்சாரம் இன்மை, மின்கலம் கொண்டுவருவதற்கான தடை போன்றவற்றால் பாவிக்கப்படாதிருந்த இம் மின் உபகரணங்களை மக்கள் மீண்டும் இப் பொறிகளைப் பயன்படுத்தி பாவிக்கக்கூடிய ஒரு நிலைமை ஏற்பட்டுள்ளது குறிப்பிடத்தக்க ஒரு விடயமாகும்

இவ்வாறு இப் பொறிகளைப் பயன்படுத்தி பயன் பெற விரும்புவோர் சக்திப்பகுதியுடன் தொடர்புகொள்ளுமாறு தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தினர் செய்திக் குறிப்பொன்றில் தெரிவித்துள்ளனர்.

ளைச் சேர்ந்த தமிழர்களே பெரும்பாலும் கைது செய்யப்பட்டமையும் இதில் வயது வேறுபாடு கூட காட்டப்பட

(6 ஆம் பக்கம் பார்க்க)

விற்கு தலைமை தாங்கவுள்ளார். இந்த ஆணைக்குழுவில் ஐந்து பேர் அங்கம் வகிக்கவுள்ளனர். சிறிலங்காவில் உள்ள எதிர்க் கட்சிகளும் இந்த அறிவிப்பு தேர்தல் காலக் கண்துடைப்பே எனவும், எதிர்க்கட்சிகள் சுட்டிக் காட்டியுள்ளன: அத்து

(6 ஆம் பக்கம் பார்க்க)

## நாளை மாணவர் எழுச்சி நாள் சகல ஏற்பாடுகளும் பூர்த்தி

(யாழ்ப்பாணம்)

நாளை கொண்டாடப்படவுள்ள மாணவர் எழுச்சி நாளுக்கான ஏற்பாடுகள் யாவும் பெருமளவில் பூர்த்தியாகியுள்ளன- பாடசாலை ரீதியாகவும் கோட்ட ரீதியாகவும் மாணவர் எழுச்சி நாள் நிகழ்வுகள் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளன-

மாணவ சமுதாயத்தை சமூகத்துக்கு ஏற்ற வகையில் உருவாக்குவதற்கும் மாணவர் மட்டத்தில் விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்கும் ஏற்ற வகையில் இம் மாணவர் எழுச்சி நாள் அனுஷ்டிக்கப்படவுள்ளது-

மாணவர் எழுச்சி நாளான நாளை ஒவ்வொரு பாடசாலையிலும் காலை 8; 30 மணியளவில் தமிழீழ தேசியக் கொடி ஏற்றலுடன் மாணவர் எழுச்சி நாள் நிகழ்வுகள் ஆரம்பமாகும் தொடர்ந்து பாடசாலைக் கீதமும் மாணவர் எழுச்சிப் பாடலும் இசைக்கப்படும். அதனைத் தொடர்ந்து மாணவர் எழுச்சி நாள் தொடர்பான விளக்கவுரையை அந்தந்தப் பாடசாலைகளின் அதிபர்கள் நிகழ்த்துவர்- இதனைத் தொடர்ந்து மாணவர்

(6 ஆம் பக்கம் பார்க்க)

## இருநேரப் பாடசாலைத் திட்டம் அமுலாக்கம் ஒத்திவைப்பு

### மாணவர் ஆட்சேபத்தின் விளைவு

(யாழ்ப்பாணம்)

இரு நேரப் பாடசாலைத் திட்டத்தின் பொது அமுலாக்கம் தற்காலிகமாக ஒத்திவைக்கப்பட்டுள்ளது- வலயம்1 கல்விப் பணிப்பாளர் பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர் ஆகியோர் கலந்து கொண்ட நேற்றைய கூட்டத்தில் இம் முடிவு எடுக்கப்பட்டது-

மிகவும் பரபரப்புடன் நடைபெற்ற இக் கூட்டத்தில் இரு நேரப் பாடசாலைத் திட்டத்துக்கு பலத்த ஆட்சேபம் தெரிவிக்கப்பட்டதைத் தொடர்ந்து மேற்படி திட்டத்தை தற்காலிகமாக ஒத்திவைப்பது என்று முடிவு செய்யப்பட்டுள்ளது-

நல்லூர்சாதனாபாடசாலையில் நடைபெற்ற இக் கூட்டத்தில் கலந்து கொண்ட மாணவர்கள், பெற்றோர்கள் பாடசாலை அபிவிருத்திச் சபை அங்கத்தவர்கள் மட்டுமல்லாது ஆசிரியர்களும் அதிபர்களும் கூட இரு நேரப்

(6 ஆம் பக்கம் பார்க்க)

### தனது கணவர் பிரேமதாசாவிற்கு

## சிறிமா வழங்க வேண்டிய நஷ்ட ஈடு தேவையில்லை என ஹேமா அறிவிப்பு

(கொழும்பு)

ஜனாதிபதி தேர்தல் ஆட்சேப வழக்கில் முன்னாள் ஜனாதிபதி பிரேமதாசாவிற்கு சிறிலங்கா சுதந்திரக்கட்சித் தலைவி சிறிமாவோ பண்டாரநாயக்கா செலுத்த வேண்டும் என நீதிமன்றத்தால் தீர்ப்பளிக்கப்பட்ட பணத்தை தாம் பெற்றுக் கொள்ளப் போவதில்லை என ஹேமா பிரேமதாசா நீதிமன்றத்தில் தெரிவித்துள்ளார்.

இவ் வழக்கில் சிறிமாவோ பண்டாரநாயக்கா பிரேமதாசாவிற்கு பதினேழு லட்சம் ரூபா நட்ட ஈட்டுத் தொகை

(6 ஆம் பக்கம் பார்க்க)

## வரி விளம்பரம்

### இறைச்சிக் கோழி

புறொயிலர், இறைச்சிக் கோழி சனி, ஞாயிறு தினங்களில் காலை 8.00 மணி முதல் 11.00 மணிவரை சுத்தம் செய்து கொடுக்கப்படும். (வெலிங்டன் சந்தி) 382, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம் (8466)

### சலனம்

உலக சினிமா தரம் பற்றிய விமர்சன சஞ்சிகை. எல்லாக் கடைகளிலும் விற்பனையாகிறது (8471)

### சமூகமாற்றத்திற்கான அரங்கு

ஈழத்தமிழரிடையே சமூக மாற்றத்திற்கான வன்மையான அரங்கினை வளர்ப்பது பற்றிய ஒரு நாடக ஆக்க வியல் ஆய்வு - ஆசிரியர் க. சிதம்பரநாதன் (8470)

### சரநூ

கலை இலக்கிய சஞ்சிகை அடுத்த இதழ் கோமல் சுவாமிநாதன் பேட்டியுடன் இலங்கைச் சிறப்பிதழ். எல்லாக் கடைகளிலும் விற்பனையாகிறது (8472)

### துளிர்

ஏப்ரல், மார்ச் இதழ்கள் விற்பனையாகிறது எல்லாக் கடைகளிலும் கிடைக்கும் (8473)

### காணி விற்பனைக்கு

சாவகச்சேரி கண்டி வீதியில் சாவகச்சேரி இந்துக்கல்லூரிக்கு முன்பாக உள்ள 2½ பரப்புக் காணி (சதுரவடிவம்) உடன் விற்பனைக்கு உண்டு தொடர்புகட்கு: நாதன்ஸ் கூல்பார் சமிகத்தானை, சாவகச்சேரி. (8464)

### சைனா மகசின்

மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக்கொள்ளலாம் விபரங்களுக்கு வசந்தம் புத்தக நிலையம் புதிய பஸ் நிலையம் முன் யாழ்ப்பாணம் (8457)

### துளிர்

தமிழ் நாடு, புதுவை அறிவியல் இயக்கம் இணைந்து வெளியிடும் சிறுவர்களுக்கான அறிவியல் மாத இதழ் மாணவர்களுக்கு அதிக பயன்தரக் கூடியது (8474)

## கொள்ளுப்பிட்டி கரையில் பெண் சடலம் மீட்பு

(கொழும்பு)

கொள்ளுப்பிட்டி புகையிரத நிலையத்திற்கு அருகே கடற் கரையோரமாக ஒரு பெண்ணின் சடலம் கண்டு பிடிக்கப்பட்டுள்ளதாகவும் இவரின் மரணம் தொடர்பாக பொலிசாரினால் மேலதிக விபரம் பெறமுடியாது இருப்பதாக தெரிய வருகின்றது.

நேற்று முன்தினம் காலை இச் சடலம் கண்டு பிடிக்கப்பட்டதாகவும் இதற்கு முன்தினம் மாலை பம்பலப்பிட்டி கடற்கரைக்கு அருகே ஓர் குழந்தையின் சடலம் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

### பாலர் பாடசாலை திறப்பு

(பருத்தித்துறை)

தமிழர்புனர்வாழ்வுக்கழகம் வதிரி தேவரையாளி சனசமூக நிலைய முன்றலில் பாலர் பாடசாலை ஒன்றைத் திறந்து வைத்துள்ளது. இப் பாலர் பாடசாலை கிராமத்தின் சமூகசேவையாளர் ஆழ்வாப்பிள்ளை ஞாபகார்த்தமாக திறந்து வைக்கப்பட்டது. இத்திறப்புவிழா சனசமூக நிலையப் போசகர் திரு த ஐயாத்துரை தலைமையில் நடைபெற்றது தமிழீழ தேசியக்கொடியை விடுதலைப்புலிகள் அரசியல் பிரிவு வடமராட்சிப் பொறுப்பாளர் திரு. செல்வமும் மங்களவிளக்கை கரவெட்டி பிரதேச செயலக நிர்வாக அதிகாரி திரு வே. வீரபத்திரப்பிள்ளையும் ஏற்றி விழாவை ஆரம்பித்துவைத்தனர் தமிழர்புனர்வாழ்வுக்கழக வடமராட்சி இணைப்பாளர் திரு. இரா சிவச்செல்வம்பாலர்பாடசாலையைச் சம்பிரதாய பூர்வமாகத் திறந்து வைத்தார்பலரின் சிறப்புரைகளையடுத்துகலைநிகழ்ச்சிகளும் இடம் பெற்றன. [25]

### கோழிகளுக்கு தடுப்பூசி

வடமராட்சிப் பகுதியில் கோழி வளர்ப்பாளர்களின் கோழிகளை கோழி அம்மை நோயிலிருந்து பாதுகாப்பதற்காக கோழிகளுக்கு கோழி அம்மை நோய்த் தடுப்பூசி ஏற்றும் நடவடிக்கைகளை பருத்தித்துறை கால்நடை வைத்திய அதிகாரி டாக்டர் பொ. இராமநாதன் துரிதமாக மேற்கொண்டுள்ளார். கோழி வளர்ப்பாளர்களுக்கு கால்நடை வைத்திய அதிகாரி விடுத்துள்ள கோரிக்கையில், கோழி வளர்ப்போர் அனைவரும் கோழிகளின் நன்மை கருதி கோழிகளுக்கு கோழி அம்மை நோய்த் தடுப்பூசிகளைப் போட்டுக் கொள்ளுமாறு கேட்டுள்ளார். (25)

### மாணவர் கௌரவிப்பு

தமிழீழம் பிரகடனப்படுத்தியுள்ள மாணவர் எழுச்சி தினமான ஜூன் 5ஆம் திகதி, மாணவர்கள் கௌரவிக்கப்படவுள்ளனர். நல்லூர் கல்விக்கோட்டம் யாழ் இந்து மகளிர் கல்லூரியிலும், யாழ்ப்பாணக் கல்விக்கோட்டம் யாழ் மத்திய கல்லூரியிலும் மாலை 2.30மணிக்கு ஆரம்பமாகவுள்ளன. சகல மாணவர்களையும், ஆசிரியர்களையும், அதிபர்களையும், நலன் விரும்பிகளையும் கலந்து கொண்டு சிறப்பிக்குமாறு பிரதிக் கல்விப் பணிப்பாளர் கேட்டுள்ளார்.

### எருமைப்பாலில் நெய் உற்பத்தி

தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவன முல்லை மாவட்டத்தினால் குமுழமுனையில் ஆரம்பிக்கப்பட்டுள்ள பால் சேகரிப்பு நிலையத்தில் சேகரிக்கப்படும் எருமைப் பாலில் இருந்து இயந்திர மூலமாக நெய்உற்பத்தி செய்யும் திட்டம் சிறப்பாகச் செயல் படுத்தப்படுகின்றது.

இந்த நிலையத்தில் உற்பத்தி செய்யப்படும் நெய் போத்தல்களில் அடைக்கப்பட்டு விற்பனை செய்யப்படுகின்றது. அதோடு ஆடை நீக்கப்பட்ட பால் வேறாக விற்பனை செய்யப்படுகின்றது இந்த ஆடை நீக்கிய பாலுக்கு நல்ல விற்பனை வாய்ப்பு இருப்பதையும் காணக்கூடியதாக உள்ளது.

## சுற்றாடல் தினத்தையொட்டி சூழல் பேணல் கருத்தரங்கு

உலக சுற்றாடல் தினத்தையொட்டி சூழல் பாதுகாப்பு நிறுவனமும் யாழ் பல்கலைக் கழக புவியியற்கழகமும்இணைந்து நடாத்தும் சூழல் மாசடைதல் பேணுதல் அபிவிரு ... ளர் எஸ் ரி பி இராஜேஸ்வரனும் கருத்துரை வழங்குவர் குற்றவாளிக்கூண்டில் மனிதன் எனும் மாணவரின் வழக்காடு மன்றமும் நடைபெறும்

## தேர்தல் வன்செயல் தடுக்க பாதுகாப்புக் குழுக்கள்

### ஒவ்வொரு பொலிஸ் பிரிவுகளில் அமையும்

(கொழும்பு)

ஒவ்வொரு பொலிஸ் நிலையங்களை வரையறை செய்யும் பகுதிகளில் பொதுமக்கள் பாதுகாப்புக் குழுக்கள் அமைக்கப்படுவதற்கு அமைச்சரவை அங்கீகாரம் கிடைத்துள்ளது.

சிறிலங்கா ஜனாதிபதி டி பி விஜேதுங்காவின் விசேட பணிப்பின் பெயரில் இக் குழுக்கள் அமைக்கப்படுவதாகவும் எதிர் காலத்தில் நடைபெறும் தேர்தல்களின்போது வன்செயல்களைத் தடுக்கும் நோக்குடன் இந்நடவடிக்கை மேற்கொள்ளப்பட இருப்பதாக தெரிவிக்கப்படுகின்றது

## மேமாத அதிர்ஷ்டசாலிகள்

1-ம் பரிசு:- இல 5733 ந. குலேந்திரன் கோண்டாவில் வடக்கு கோண்டாவில்

2-ம் பரிசு:- இல 5740 திருமதி உமாகாந்தன் ஆஸ்பத்திரி நாயன்மார்கட்டு.

3-ம் பரிசு:- இல 6167 நவசீலன் மானிப்பாய்.

நீங்களும் பரிசுகள் பெற்றிட எழிலகத்தில் கொள்வனவு செய்யுங்கள்.

**"எழிலகம்"**

**லெப். இளங்கோ தெரு-யாழ்ப்பாணம்.**

(சி 9593)

## பிற்போடப்பட்டுள்ளது

யாழ் இளவாலை புனித ஹென்றியரசர் கல்லூரியின் அபிவிருத்தி நிதிக்காக 05-06-94 அன்று மானிப்பாய் மகளிர் கல்லூரியில் நடைபெற இருந்த "இளமாலை இசை விருந்து" எனும் நிகழ்ச்சி தவிர்க்க முடியாத காரணத்தினால் பிற்போடப்பட்டுள்ளது. நடைபெறும் திகதி பின்னர் அறிவிக்கப்படும்.

(8469) - அதிபர்

## கலட்டி எச்சாட்டி மகாமாரியம்மன் தேவஸ்தானம்

வண்ணார்பண்ணை கிழக்கு கலட்டி எச்சாட்டி மகாமாரியம்மன் ஆலயத்துடன் தொடர்புள்ளவர்கள் மகாசபைக்கு அங்கத்தவர்களாகச் சேர்ந்து கொள்ளலாம். 18-06-94-ம் திகதி வரை விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும்.

காவல்துறையினரின் ஆலோசனையின் பிரகாரம் இச்சபையின் முதல் கூட்டம் 26-06-94-ம் திகதி ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 4.00 மணிக்கு ஆலய மண்டபத்தில் நடைபெறும். மகாசபை அங்கத்துவம் பெற்றவர்கள் தவறாது சமுகம் அளிக்கும்படி அன்புடன் கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள்.

- இடைக்கால நிர்வாகம்

(8467)

## நினைவு கூருகின்றோம்...

## 04.06.1994

1985ஆம் ஆண்டு இதேதினத்தில் தமிழீழக் கடற்பரப்பில் சிறிலங்காக் கடற்படையினர் மேற்கொண்ட தாக்குதலில் கொல்லப்பட்ட 13 தமிழர்கள்.

1986ஆம் ஆண்டு கிளி- இரத்தினபுரம் பகுதியில் சிறிலங்காப்படையினர் மேற்கொண்ட உலங்குவானூர்தித் தாக்குதலில் வீரச்சாவெய்திய,

**ஆனந்தன்** [மாரிமுத்து மாதவன் - உதயநகர் கிளிநொச்சி]

திருமலையில் பேருந்தில் பயணம் செய்து கொண்டிருந்த போது சீனன்வாடிப் பகுதியில் சிறிலங்கா ஊர்காவற்படையினரால் கடத்திச் செல்லப்பட்டுக் காணாமல் போன 05 தமிழர்கள். ஆண்டாங்குளம் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினரால் சுட்டுக் கொல்லப்பட்ட தமிழ்த்தம்பதிகள்.

கிளி- ஆனந்தபுரம் பகுதியில் சிறிலங்காப்படையினர் மேற்கொண்ட வான்தாக்குதலின் போது எறிகணை வீட்டிற்குள் வீழ்ந்து வெடித்ததில் கொல்லப்பட்ட ஒரே குடும்பத்தைச் சேர்ந்த 05 குழந்தைகள்.

கொழும்பிலிருந்து யாழ்ப்பாணத்திற்கு உணவு முத்திரை கொண்டு வரும் பணியின் போது கிளிநொச்சியில் வைத்து சிறிலங்காப்படையினர் மேற்கொண்ட உலங்குவானூர்தித் தாக்குதலினால் பாரவண்டியுடன் எரிக்கப்பட்டுக் கொல்லப்பட்ட யாழ் செயலக ஊழியர் இருவர்

1987ஆம் ஆண்டு வடமராட்சியில் சிறிலங்காப் படையினர் 10வது நாளாக மேற்கொண்ட ஒப்பறேசன் லிபறேசன் நடவடிக்கையின் போது பிள்ளையார் கோயிலுள் தஞ்சமடைந்திருந்த நிலையில் பட்டினியால் மடிந்த நாலு வயதுக்குழந்தை,

1988ஆம் ஆண்டு மட்டு- மாமங்கம் பகுதியில் இந்தியப்படையினர் மேற்கொண்ட துப்பாக்கிச் சூட்டில் வீரச்சாவெய்திய-

**2-ம் லெப். ராஜவேல்-கிளிக்குமார்** [மனுவல் அந்தோனிதாஸ் -கருவேப்பங்கேணி-மட்டு]

**அலெக்ஸ்** [மட்டுநகர்]

1989ஆம் ஆண்டு தேசவிரோத சக்திகளினால் கடத்திச் செல்லப்பட்டு ஏறாவூர்ப் பகுதியில் வைத்துச் சுட்டுக் கொல்லப்பட்ட,

❋ **மயிலு** [சிவலிங்கம் மயில்வாகனம்-செங்கலடி-மட்டு]

❋ **செல்வரத்தினம்** [செங்கலடி - மட்டு]

யாழ் - அரியாலை தபால்பெட்டிச் சந்தியில் தேசவிரோதசக்திகளினால் சுட்டுக் கொல்லப்பட்ட தமிழ்ப் பொதுமகன்.

1991ஆம் ஆண்டு மட்டு- உன்னிச்சைப் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினருடனான சமரின் போது விழுப்புண்ணடைந்த நிலையில் வீரச்சாவெய்திய,

**ஜெயராஜ்** [வடிவேல் நந்தகுமார் - 35-ம் கிராமம் - அம்பாறை]

திருமலையில் எதிர்பாராதவிதமாக ஏற்பட்ட வெடிவிபத்தில் விழுப்புண்ணடைந்து எமைப்பிரிந்த,

**லெப். மன்னன்** [நடேசகுரு உமாகாந் - தம்பலகமம் - திருமலை]

1992ஆம் ஆண்டு யாழ்- தெல்லிப்பழைப் பகுதியில் சிறிலங்கா இராணுவம் குறிபார்த்து சுட்டதில் வீரச்சாவெய்திய,

**பாண்டியன்** [ஞானசிங்கம் கனகசிங்கம் - முனைக்காடு - மட்டு]

**2-ம் லெப். தேவன்-ராஜ்** [கந்தசாமி மகிழ்ராஜ் -

## உடன் தேவை

நல்ல நிலையிலுள்ள 15KW மின்பிறப்பாக்கி (ஜெனரேற்றர்) ஒன்று உடனடியாக விலைக்குத் தேவைப்படுகிறது தொடர்பு கொள்ளவும்;- சக்திப் பகுதி, தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம், காங்கேசன்துறை வீதி, தாவடிச் சந்தி, தாவடி, தமிழீழம்;
(சி-9526)

## சேவல் குஞ்சுகள் விற்பனை

2 கிழமை வளர்ச்சியடைந்த பிறவுண் சேவல் குஞ்சுகள் உடன் விற்பனைக்குண்டு; 'மல்லிகாபதி' சந்தை கிழக்கு ஒழுங்கை, மானிப்பாய்.
(8452)

## விற்பனைக்குண்டு

நல்லினக் கறுப்பு அல்சேஷன் நாய்க்குட்டிகள் அத்துடன் இறைச்சிக் கோழிகள், விறாத்துக் குஞ்சுகள் விற்பனைக்குண்டு. தொடர்பு; 698/15, சபாபதி வீதி, தலையாழி (வைரவர் கோவிலடி, யாழ்ப்பாணம்) (8462)

## கால்நடை சிகிச்சை

முல்லைத்தீவு மாவட்ட நெடுங்கேணிக் கிராமத்தில், தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தின் முல்லை மாவட்ட விலங்கு வேளாண்மைப் பகுதியினால் நடாத்தப்பட்டு வரும் முதலுதவிச் சிறு சிகிச்சை நிலையம், கால்நடைகளுக்கு ஏற்படும் நோய்களுக்கான சிகிச்சை அளித்து வருகின்றது. இந்தப் பகுதியில் உள்ள பண்ணையாளர்களுக்கும், வீடுகளில் கால்நடை வளர்ப்போருக்கும் இந்த சிகிச்சை நிலையத்தின் சேவை பயனளிக்கிறது.

ந்து நடாத்தும் சூழல் மாசடைதல் பேணுதல் அபிவிருத்தி பற்றிய கருத்தரங்கு நாளை ஞாயிறு பிற்பகல் 3 மணிக்கு யாழ் பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் நடைபெறும்

புவியியற்துறை தலைவர் பேராசிரியர் செ. பாலச்சந்திரன் தலைமையில் நடைபெறும் இக் கருத்தரங்கில் சூழலும் அபிவிருத்தியும் எனும் கருத்துரையை பொருளியல்துறை தலைவர் பேராசிரியர் என். பாலகிருஷ்ணனும் நமதுதேசத்தில் சூழல் பாதுகாப்பின் அவசியம் எனும் தலைப்பில் பெ ஐங்கரநேசனும் மூன்றாம் உலகில் சூழல் மாசுபடல் என்ற தலைப்பில் புவியியற்துறை சிரேஷ்ட விரிவுரையா

## போஷாக்குணவு வழங்கப்பட்டது

(தொல்புரம்)

சங்கானைப் பிரதேச செயலகத்தினால் நடாத்தப்படவுள்ள போஷாக்கு வாரத்தினையொட்டி கர்ப்பிணித் தாய்மார்களுக்கு போஷாக்கு உணவு வழங்கப்பட்டது.

வலிமேற்கு பிரதேச செயலர் திரு கா. சந்திரராசா தலைமையில் கடந்த வியாழக்கிழமை அன்று நடைபெற்ற மேற்படி நிகழ்வின் போது சங்கானை அரசினர் வைத்தியசாலையில் வைத்து போஷாக்கு குறைவான 52 கர்ப்பிணித் தாய்மாருக்கு ஜீவாகாரம் சத்துணவு வழங்கப்பட்டது. இந்நிகழ்வின் போது வைத்திய அதிகாரிகள், சுகாதாரப் பரிசோதகர்கள், பிரதேச செயலக அலுவலர்கள், கிராமசேவையாளர் மற்றும் பலர் கலந்து கொண்டனர்.

மேலும் தொல்புரம் பாணாவெட்டி அரசினர் வைத்தியசாலையிலும் போசாக்கு குறைவான 42 கர்ப்பிணிகளுக்கு ஜீவாகாரம் சத்துணவு பிரதேச செயலரினால் வழங்கப்படவுள்ளன. (41)

மன்றமும் நடைபெறும்

## இலவச வகுப்பு

(கொழும்புத்துறை)

யாழ். அரியாலை சரஸ்வதி சனசமூக நிலையத்தின் சார்பில் பிரதி புதன்கிழமைகள் தோறும் மாலை 6-30 மணியில் இருந்து இரவு 8-00 மணி வரை நிலைய மண்டபத்தில் ''பொது உளச்சார்புப் பயிற்சி வகுப்பு'' இலவசமாக நடாத்தப்பட்டு வருகிறது.

இப்பயிற்சி வகுப்பு அரச திணைக்களங்களில் எழுதுவினைஞர் பதவி, ஆசிரியர் பதவி, கிராம அலுவலர் பதவிகளுக்கு விண்ணப்பம் செய்தவர்களுக்காக நடத்தப்படுகிறது.

## உற்பத்தி எழுச்சி வாரப் போட்டி

மன்னார் மாவட்ட தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தால் நடாத்தப்பட்ட உற்பத்தி எழுச்சி வாரப் போட்டிகள் கடந்த ஏப்ரல் மாதம் 24ஆம் திகதி முதல் 30ஆம் திகதி வரை கோலாகலமாக நடைபெற்றன.

நிலம் கொத்துதல், வலை பின்னுதல், விளக்குமாறு கட்டுதல், கயிறு திரித்தல், பனை மரம் ஏறுதல், பாய் வலித்து வள்ளம் ஓட்டுதல், வள்ளம் தாங்குதல், நீச்சல், கிடுகு இழைத்தல், புதிய வகை உணவு தயாரித்தல், தொப்பி இழைத்தல், மாட்டுவண்டிச் சவாரி, மாணவர்களுக்கான பொது அறிவுப் போட்டிகள் என்பன மன்னாரின் பல்வேறு பகுதிகளிலும் நடைபெற்றன.

பெருமளவு போட்டியாளர்கள் பங்குபற்றிய இந் நிகழ்வுகளில் வெற்றியீட்டியோர்களுக்கு பெறுமதிமிக்க பரிசில்களும், சான்றிதழ்களும் வழங்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

- இடைக்கால நிர்வாகம்

(8467)

## அறிவித்தல்

கடந்த 1-6-94 அன்று இரவு எமது புத்தூர் கிளையில் கடை உடைத்து மணிப்புரி, காஞ்சிபுரம், சேட் சாரம் முதலியன களவாடப்பட்டுள்ளது. எனவே மேற்படி பொருட்களை யாராவது விற்பனை செய்ய முற்பட்டால் அல்லது இது பற்றிய தகவல் தெரிந்தால் எமக்கோ அல்லது அருகில் உள்ள காவல் துறைக்கு அறிவிக்கவும். தகவலுக்கு தகுந்த சன்மானம் வழங்கப்படும்.

லிங்கம் சில்க் கவுஸ்,
18, நவீனசந்தை
யாழ்ப்பாணம.

(8468)

## மாணவர் எழுச்சி நாள் ஜூன் 5

தமிழீழத்தில் வாழ்கின்ற மாணவர்கள் சகல நலன்களும் பெற்று நற்பிரசையாக வாழ வாழ்த்துகின்றோம்.

யாழ்ப்பாணம்/நல்லூர்
கல்விக் கோட்டத்தினர்.
(8463)

## தண்ணீர் விநியோகிக்கும் கொள்கலன்

இலங்கை செஞ்சிலுவைச் சங்க யாழ் கிளைக்குச் சொந்தமான தண்ணீர் விநியோகிக்கும் கொள்கலனை (1) ஒட்டி திருத்தியமைக்கப்பட இருப்பதால் இதற்கான கூறுவிலையையும், (2) புதிதாக இதைப் போன்று ஒன்று அமைப்பதற்கான கூறுவிலையையும் 10-06-94 ற்கு முன்னதாக கீழ்க்காணும் விலாசத்திற்கு சீல்பண்ணிய உறையில் அனுப்பி வைக்கவும். கொள்கலனை எமது பணிமனையில் காரியாலய நேரத்தில் பார்வையிடலாம்.

கௌரவ செயலாளர்

73, கண்டி வீதி,
யாழ்ப்பாணம்.
1-06-1994

(சி-9586)

2ம் லெப். தேவன்-ராஜ் [கந்தசாமி மகிழ்ராஜ் - காங்கேசன்துறை வீதி, சுன்னாகம்- யாழ்]

வவுனியா யோசப் முகாம் தடுப்புக் காவலில் இருந்து தப்பி ஓடுகையில் மின்சார வேலியில் சிக்கி உயிர் நீத்த 2 தமிழிளைஞர்கள்,

### ஆகியோரை இந்நாளில் நினைவு கூருகின்றோம்

✱ இக்குறியிடப்பட்ட மாவீரர்கள் ஈரோஸ் அமைப்பு இயங்கிய காலத்தில் அதனுடன் இணைந்து செயற்பட்டவராவார்கள்.

தமிழீழ விடுதலைப் புலிகள்.
(சி-9592)

## 2-ம் ஆண்டு நினைவலைகள்



பிறப்பு:
5-3-1971

வீரச்சாவு:
4-6-1992

### 2-ம் லெப். தேவன்/ராஜ்
கந்தசாமி-மகிழ்ராஜ்

உன் வாழ்வின் முடிவில் தானே
எங்களின் வாழ்க்கை வெளிச்சம் பெறுகிறது
உன் வாழ்வினை இதயத்திற்குள் சுமக்கிறோம்
உன் நினைவுகளை எம் வாழ்க்கையில் சேர்க்கிறோம்
உனது பயணம் விடுதலைக்கான முயற்சி
உனது வீழ்ச்சி எமது வளர்ச்சிக்கான
புதைப்பு .................

உன் நினைவுகளைச் சுமந்து நிற்கும்
தாய், சகோதர, சகோதரிகள்

42, மருதடி வீதி,
யாழ்ப்பாணம்.
(8465)

## வைத்தியசாலை விடுதிக்கு மலத்தியோன் அடிக்கப்படும்

(யாழ்ப்பாணம்)

யாழ் போதனா வைத்திய சாலையின் நோயாளர் விடுதிகளுக்கும் மலத்தியோன் விசிற யாழ் மாநகர சுகாதார வைத்திய அதிகாரி நடவடிக்கை எடுத்துள்ளார்.

தற்சமயம் நோயாளர்விடுதிகளில் நோய்க் கிருமிகள் உள்ளமை கண்டுபிடிக்கப்பட்டு இவ் விடுதிகளுக்கு மலத்தியோன் விசிறுவதன் மூலம் நோய்க் கிருமிகள் அழிக்கப்படுகின்றன என்பது கண்டுபிடிக்கப் பட்டுள்ளது.

இதனை அடுத்து யாழ் போதனா வைத்திய சாலையின் அனைத்து நோயாளர் விடுதிகளுக்கும் மலத்தியோன் விசிறப்படவுள்ளன

இதற்கான நடவடிக்கைகளை யாழ் மாநகர வைத்திய அதிகாரி பிரிவினர் மேற்கொள்ளவுள்ளதாக தெரிவிக்கப்பட்டது. (பா),(நி)

## பயிர்களை அழித்தவருக்கு அபராதம் கட்ட பணிப்பு

(தென்மராட்சி)

மீசாலை வடக்கு மீசாலையைச் சேர்ந்த நபர்கள் அதே இடத்தைச் சேர்ந்த ஒருவருக்குச் சொந்தமான விவசாயப் பயிர்கள் தொடர்பான அழிவொன்றைச் செய்தமைக்காக சாவகச்சேரி காவல்துறையினர் மன்றில் சந்தேகநபர்கள் மீது வழக்கினைத் தாக்கல் செய்தனர்.

எதிராளிகள் தமது குற்றத்திற்கு சுற்றவாளி என கூறியது அடுத்து வழக்கின் விளக்கம் நீதியாளர் திரு. மயூரன் முன்னிலையில் இடம்பெற்றது இதனை விசாரித்த நீதியாளர் எமது தமிழீழத்தில் ஒரு தனி மனிதனால் பெரும் முயற்சியினால் உண்டாக்கப்பட்ட மரங்களை சமூகத்தில் உள்ளவர்கள் ஒருசிலர் ஒன்று சேர்ந்து அப்பயிர்களை அழிப்பது ஒருபொழுதும் அனுமதிக்கப் படமாட்டாது. எனவும்.

எனினும் வெட்டப்பட்ட பயிர் மீண்டும் துளிர்விடுவதை கருத்தில் கொண்டு இரண்டு குற்றவாளிகளுக்கும் தலா 1200 வீதம் அபராதமும் தவறின் தலா 60 நாள் வீதம் சிறைத் தண்டனை வழங்கவும் பாதிக்கப்பட்டவருக்கு ஒருவர் தலா 2500 ரூபா வீதம் மொத்தமாக 5000 ரூபா கட்டும்படியும் இழப்பீடு கட்டத்தவறின் மேலதிகமாக ஆளுக்கு 100 நாட்கள் சிறைத்தண்டனை எனவும் தீர்ப்பளித்தார். (86)

## கடனுதவி

வறுமைக் கோட்டின் கீழ் வாழும் 18 பயனாளிகளுக்கு சுயதொழிலை ஊக்குவிக்கும் முகமாக தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம் ஊக்குவிப்புக்கடனை வழங்கியுள்ளது.

கடந்த 13-ம் திகதி ஏழாலை மத்திய மகா வித்தியாலயத்தில் வைத்து உடுவில் வட்டத்தைச் சேர்ந்த பயனாளிகளுக்கே ஒருவருக்கு தலா 10,000 ரூபா வீதம் கடன் உதவிகள் வழங்கப்பட்டன.

இத்துடன் தீவக ஒன்றியத்தைச் சேர்ந்த கடல் தொழில் செய்யும் 27 பயனாளிகளுக்கும் இவ்வாறு சுயதொழில் கடனாக ஒருவருக்கு தலா 5000ரூபா வீதம் கடன் உதவி வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவது குறிப்பிடத்தக்கது.

## சுகாதாரம் பேணா உணவகம் மூடிவிட நடவடிக்கை

(தென்மராட்சி)

தென்மராட்சிப் பகுதியில் சுகாதார முறையினைக் கையாளுவதற்காக கடந்த வாரம் சாவகச்சேரி நகரசபை மண்டபத்தில் விசேட ஆணையாளர் திரு சி.நடராசா தலைமையில் சுகாதார கருத்தரங்கு ஒன்று இடம் பெற்றது.

இக்கூட்டத்தில் தென்மராட்சிப்பகுதியில் உள்ள உணவகம் தேநீர்ச்சாலை, பேக்கரி போன்ற இடங்களில் பணி புரியும் ஊழியர்கள் தமது உடலை வைத்திய அதிகாரிகளிடம் பரிசோதனை செய்து மருத்துவ அறிக்கை வைத்திருக்க வேண்டும் எனவும் உணவகங்களில் பணிபுரிவோர் கைகளில் கையுறை அணிய வேண்டும் என்றும் மேலங்கிகள் அணியவேண்டும் என்றும் இதனை இம் மாதம் எல்லா இடங்களிலும் அறிமுகப்படுத்தப்படவேண்டும் என்றும் மீறுவோர் கடைகளை மூட நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் எனவும் தீர்மானம் எடுக்கப்பட்டது.

## புள்ளி விபரத் தொகுப்பு

யாழ் மாவட்ட நிலப்பரப்பில் உள்ள விவசாயத்துக்கு உகந்த ஒரு அங்குல நிலமேனும் வீணாகாமல் போகக்கூடாது, முழுநிலப்பரப்பும் பயிர்ச் செய்கைக்குப் பயன்படுத்தப் பட வேண்டும். உணவு உற்பத்தியில் தன் நிறைவை நோக்கி நகர வேண்டும், பயிர்ச்செய்கை செய்யப்படாத தரிசு நிலங்களை இனம்கண்டு அவற்றைப் பயிர்ச்செய்கைக்குக் கொண்டு வர வேண்டும் என்ற அடிப்படை நோக்கங்களைக் கருத்தில்கொண்டு சகல கிராம சேவையாளர் பிரிவுகளிலும் 93/94 ஆண்டுக்கான காலபோக நெற்செய்கை, மேட்டுநிலச் செய்கை புள்ளி விபரங்களும், மாதிரி அளவீட்டு முறையில் உற்பத்தி செலவு விபரமும் நெல் அறுவடை விபரமும் திரட்டப் பட்டு தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தின் புள்ளிவிபரக் கிளையினால் தொகுக்கப்பட்டு வருகிறது.

மேட்டு நிலச் செய்கையில் பயன்படுத்தப்பட்ட, பயிரிடப் பட்ட, அறுவடை செய்யப் பட்ட நிலப்பரப்புத் தொகை பயிர்ச் செய்கையாளர் எண்ணிக்கை ரீதியாகவும், பயிர்ச் செய்கை செய்யப்பட்ட, செய்யப்படாத நிலப்பரப்பு பயிர் ரீதியாகவும் கொடுக்கப்பட்டு வருகிறது.

## 70ஆம் ஆண்டு நிறைவு

(தென்மராட்சி)

யா/வரணி வடக்கு சைவப் பிரகாச வித்தியாசாலையின் எழுபதாம் ஆண்டு நிறைவு விழாவும், பரிசளிப்பு விழாவும் எதிர்வரும் திங்கட் கிழமை பிற்பகல் 1 மணிக்கு பாடசாலை மண்டபத்தில் அதிபர் திரு. ப. இராசரத்தினம் தலைமையில் இடம்பெறவுள்ளது. (86)

## குளம் ஆழமாக்கல்

(கொழும்புத்துறை)

கொழும்புத்துறை மேற்கில் உள்ள இலந்தைக்குளம் யாழ். மாநகராட்சி மன்றத்தால் ஆழமாக்கப்பட்டு வருகின்றது.

இக்குளத்தில் மழை நீரைத் தேக்கி வைக்கும் முகமாகவே இக்குளம் ஆழமாக்கப்பட்டு வருவதாக யாழ் மாநகராட்சி மன்ற உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார். (24)

## கலைஊடக அங்கத்துவ அட்டை

யாழ் மாவட்டத்திலுள்ள கலைஊடக இணைய உறுப்பினர்களுக்கான விசேட முதலாவது பொதுச்சபைக் கூட்டம் திங்கள் காலை 9.30 மணிக்கு யாழ் இந்து குமார சுவாமி மண்டபத்தில் நடைபெற இருக்கிறது, இக்கூட்டத்தில் யாழ் மாவட்டத்திலுள்ள வீடியோ படப்பிடிப்பாளர்கள், வீடியோ நாடா விநியோகஸ்தர்கள், ஓடியோ நாடா விநியோகஸ்தர்கள், புகைப்படத்துறையினர், தொழில்நுட்ப சேவையாளர்கள் (ரி.வி. - டெக் - ஜெனரேற்றர் தொழில் செய்வோர்) அனைவரும் கலந்து கொள்வார்கள்

சகல உறுப்பினர்களுக்குமான "அங்கத்துவஅட்டை" அக்கூட்டத்தில் விநியோகிக்கப்படும். இத் தொழில்துறையில் ஈடுபடுவதற்கான முற்றான அனுமதியைப் பெறுவதாயிருந்தால்உறுப்புரிமையை உறுதி செய்து அங்கத்துவ அட்டையைப் பெற்றிருக்க வேண்டும் என்று குறிப்பிடப் பட்டுள்ளது.

யாப்பு விதி மற்றும் முக்கிய விடயங்கள் ஆராயப்பட இருப்பதால் சகல அங்கத்தவர்களையும் இக்கூட்டத்தில் பங்குபற்றுமாறு கேட்கப்பட்டுள்ளது.

## சிவகுமாரனுக்கு கௌரவம்

நாளை ஞாயிற்றுக்கிழமை மாணவர் எழுச்சி நாளாகப் பிரகடனப் படுத்தப்பட்டுள்ளதால், அத்தினத்தையும், அத்தினத்தில்வீரச்சாவடைந்த, கல்லூரிபழையமாணவர் தியாகி சிவகுமாரனையும் கௌரவப் படுத்தும் முகமாக மாபெரும் எழுச்சி விழா யாழ் இந்துவில் கொண்டாடப்பட விருக்கிறது.

## அவதூறாகப் பேசியவருக்கு அபராதம்; 20 நாள் சிறை

(தென்மராட்சி)

சரசாலை வடக்கு சரசாலையைச் சேர்ந்த நபர் ஒருவர் அதே இடத்தைச்சேர்ந்த தாயையும், மகளையும் அவதூறாகப் பேசியமைக்காகச் சாவகச்சேரி காவல்துறையினர் மன்றில் இரு பகுதியினரையும் முற்படுத்தினர்.

எதிராளியானவர்நீதியாளர் திரு. மயூரன் முன்னிலையில் குற்றத்தை ஒப்புக்கொண்ட இவர், வழக்காளியான தாயும், மகளும் தனது தங்கையினை ஏசியதனால்தான் தான் ஏசியதாகக் கூறினார். வழக்காளிகள் எதிராளிகளின் தங்கையினைப் பேசியபோது எதிராளியானவர் சட்ட நடவடிக்கை எடுத்திருக்க வேண்டும் என்று கூறி, எதிராளி நற்பிரசையாக இருக்கவேண்டும் என எச்சரித்து குற்றப்பணமாக 1000 ரூபாவும் மேலதிகமாக 20 நாட்கள் சிறைத் தண்டனையும் பணம் கட்டத் தவறின் 40 நாட்கள் சிறைத் தண்டனை அனுபவிக்க வேண்டும் எனவும் தீர்ப்பளிக்கப் பட்டது. (86

## காரைநகர் படையினர் மூளாய்நோக்கி தாக்குதல்

(தொல்புரம்)

காரைநகரில் உள்ள சிறிலங்கா இராணுவ கடற்படை கூட்டு முகாமிலிருந்து கடந்த முதலாம் திகதி இரவு 9.30 மணியளவில் மூளாய் பொன்னாலைப் பகுதிகளை நோக்கி பலத்த எறிகணை வீச்சுக்கள் மேற்கொள்ளப்பட்டன. இவ் எறிகணைகள் மேற்படி பகுதிகளில் பலத்த சத்தத்துடன் வீழ்ந்து வெடித்தன.

மேலும் இதே தினம் மாலை 6.30 மணியளவில் மாதகல் பக்கமாக இருந்து வந்த சிறிலங்கா வான்படையினரின் குண்டுவீச்சு விமானம் ஒன்று சுழிபுரம், தொல்புரம், மூளாய், வட்டுக்கோட்டை ஆகிய பகுதிகளின் வான்பரப்பில் தாழப்பறந்துவட்டமிட்டுச் சென்றதையும் அவதானிக்க முடிந்தது (41)

## மாணவர் எழுச்சிநாளில் சங்கமம் வெளியீட்டுநிகழ்வு

(யாழ்ப்பாணம்)

இம்மாதம் 5ஆம் திகதி நடைபெறும் மாணவர் எழுச்சி நாளை பிறவுண் வீதியில் இயங்கிவரும் புங்குடுதீவு மகா வித்தியாலயத்தில் சிறப்பாகக் கொண்டாடப்படவுள்ளது. அன்றைய தினம் காலை வழமையான சம்பிரதாய நிகழ்ச்சிகளுடன் எழுச்சி நாள் ஆரம்பமாகி தொடர்ந்து வித்தியாலயத்தின் 'சங்கமம்' என்னும் கையெழுத்துப் பிரதி வெளியீடும் இடம்பெறும். அத்துடன் சிரமதானம் மூலம் வித்தியாலயத்தின் சுற்றுப் புறங்கள் சுத்திகரிக்கப்படும் என்றும் விடுதலைப் புலிகள் மாணவர் அமைப்பு மகளிர் பிரிவின் தீவகக் கோட்டப் பொறுப்பாளர் செல்வி வினோ இந்நிகழ்வுகளில் கலந்து கொள்வார்.



யா/புனித மரியாள் வித்தியாலயம் (O. L. R.)

# உப அதிபர் நா. திருச்செல்வம் அவர்களின்

# மணிவிழா சிறப்பிதழ்

திரு வெனும் நண்ப வாழி



### அயராதுழைத்த உத்தமர்

திரு. நா. திருச்செல்வம் அவர்கள் ஆசிரிய சேவையில் 37 வருடங்கள் - அதிலும் 14 ஆண்டுகள் யா/புனித மரியாள் வித்தியாலயத்தில் சேவையாற்றி மணிவிழா ஆண்டில் ஓய்வு பெறுகின்றார் சாரணீயம், முத்தமிழ் விழா போன்ற பாடசாலை நிகழ்வுகள் யாவற்றிலும் பங்கேற்று அயராது உழைத்த உத்தமர். அதிபர், பெற்றோர், மாணவரின் அன்புக்குப் பாத்திரமான இப் பண்பாளர் பாடசாலை அபிவிருத்திச் சங்க பொருளாளராகவும், செயலாளராகவும் பொறுப்பேற்று உழைத்தவர். இவரது ஓய்வு கல்வியுலகைப் பொறுத்த வரை நிரப்ப முடியாதது. இவர் பல்லாண்டு வாழ்ந்து பொது சேவைகளில் ஈடுபட இறைவனை வேண்டுகின்றேன்.

திரு. சி. புலேந்திரன்
பிரதிக் கல்விப் பணிப்பாளர்,
யாழ்ப்பாணம்.



## உயிரினுமினிய நண்பர்

திரு. நா. திருச்செல்வம் அவர்களை சக ஆசிரியர், தோளுக்குத் தோள் கொடுத்து சகல நிகழ்வுகள் - சவால்களில் பங்கேற்ற உப அதிபர் என்பதனை விட உயிருக்கும் மேலான இனிய சகோதரர் - நண்பர் என்றுணர்வதிலேயே பெரு மகிழ்வடைகின்றேன். இராம - லட்சுமணர், கண்ணன் - குசேலர் என்றெல்லாம் சகோதரத்துவத்துக்கும், நட்புக்கும் ஒப்பீடு செய்து நண்பர்கள், ஆசிரியர்கள் விமர்சிக்கும்போது எம் ஆழ் மன அன்பை எண்ணி மெய்சிலிர்க்கின்றேன். இவரது ஒய்வு பாடசாலையைப் பொறுத்தளவில் ஈடு செய்ய முடியாதது. எனினும் இவரது கல்விச் சிந்தனைகள் எமக்கு வழி காட்டும். பல்லாண்டு காலம் இவரும், குடும்பத்தினரும் வாழப் பிரார்த்திக்கின்றேன்.

திரு. சி. தார்சீசியஸ்
அதிபர்

## திரு வெனும் நண்ப வாழி

திருநிறை செல்வமே எம்
சீர்மலி நண்ப வாழி
வருமுயர் தமிழன் வாழ்வு
வளம் பெறத் துய்க்க வாழி
பொறுப்பென பொலிந்து நாளும்
புகழோடு பாரி சேர
விருட்சமாய் ஆல் போல்
எங்கள் அகந்தனில்நிறைந்தாய் வாழி.

திரு. வேலாயுதம் அவர்கள்
பிரதிக் கல்விப் பணிப்பாளர்,
வலயம்-2.

### மணி விழாச் செல்வர் பல்லாண்டு காலம் வாழ்க

ஆசிரியர் நலன் புரிச்சங்கம்

பாடசாலை அபிவிருத்திச்சங்கம்

மாணவர் நலன்புரிச்சங்கம்

பழைய மாணவர் சங்கம்

யா / புனித மரியாள்
வித்தியாலயம்

மலர் வடிவம்:
திரு. சி. ஞானேஸ்வரன் B.A.
ஆசிரியர் - யா / புனித மரியாள் வித்தியாலயம் O.L.R



## நிறை அருள் பெறுக

யாழ் புனித மரியாள் வித்தியாலயத்தில் கடந்த பதினான்கு ஆண்டுகளாக உதவி ஆசிரியராக, பகுதித் தலைவராக, உப அதிபராகக் கடமையாற்றிய திரு: நா. திருச்செல்வம் அவர்களின் சேவையை வாழ்த்துவதில் மகிழ்ச்சியடைகிறேன்.

இவர் தனது சேவைக் காலத்தில் பாடசாலையின் வளர்ச்சிக்காக திறந்தஉள்ளத்துடனும் உற்சாகத்துடனும் ஆற்றிய அரும்பணிகளை நன்றிப்பெருக்கோடு நினைவு கூருகின்றேன். இவருக்கும், இவரது குடும்பத்திற்கும் இறைவனின் நிறையருள் வேண்டி நிற்கின்றேன்

அருள்திரு. ஜே. நீக்கிலஸ்
பங்குத்தந்தை

திரு. சி. புலேந்திரன்
பிரதிக் கல்விப் பணிப்பாளர்,
யாழ்ப்பாணம்.

## பண்பாளர் திருச்செல்வம்

திரு. நா. திருச்செல்வம் எத்தகைய வேளையிலும் கடமை, கண்ணியம், பண்பு தவறாதவர் அதிபர் - ஆசிரியர் - மாணவர் - பெற்றோர் - நலன் விரும்பிகள் அனைவருடனும் பண்பாலும் அன்பாலும் ஒன்றுபட்டு பாடசாலை வளர்ச்சிக்காக உழைத்தவர். ஒரு பெற்றோர் தின விழாவில் நான் கலந்து கொண்டபோது திரு திருச்செல்வம் அவர்கள் Drummer ஆக பங்கேற்று எல்லோரது பாராட்டையும் பெற்றார். இவர் நல்லவர், வல்லவர், சேவை மனப்பாங்குள்ளவர். அவரும் குடும்பத்தினரும் சகல நலன்களும் பெற்று வாழ்க என வாழ்த்துகின்றேன்.

திரு. சி. தியாகராசா
(உடற்கல்விப் பணிப்பாளர், யாழ் பல்கலைக் கழகம் - முன்னாள் பிரதிக் கல்விப் பணிப்பாளர், யாழ்ப்பாணம்)

## பீடுற வாழ்க!

| | | | |
|---|---|---|---|
| திருவும் | செல்வமும் | சேர்ந்த | சீர்த்தியான்; |
| உருகும் | அன்பினில் | உயர்ந்த | உத்தமன்; |
| பெருகும் | பண்பினைப் | பேணிடும் | ஆசான்: |
| எவரும் | அணுகுதற் | கினியன் | எளியன்; |
| மலையகம் | முதலாய்க் | கல்விப் | பணியினைத் |
| தலைமிசை | கொண்டு | சளைக்கா | துழைத்தோன்; |
| அன்னை | அடைக்கல | மாதா | நிழலினில் |
| தன்னைத் | தூய | மரியாள் | பள்ளியில் |
| பின்னை | நாளில் | பிரதி | அதிபராய் |
| மண்ணுக் | காக | மகிழ்ந்து | உழைத்தவன். |
| அறுபது | அகவை | பெற்று | மணிவிழா |
| பெறுவது | நற்றவம்; | பீடுற | வாழ்க! |

திரு. நா. க. சண்முகநாதபிள்ளை அவர்கள்
அதிபர், யாழ் மத்திய கல்லூரி.


## மணிவிழா நாயகரை வாழ்த்துகின்றோம்

- யாழ்ப்பாணம் பலநோக்கு கூட்டுறவுச் சங்கம்
- வேலணை பலநோக்கு கூட்டுறவுச் சங்கம்
- ஊர்காவற்றுறை பலநோக்கு கூட்டுறவுச்சங்கம்
- புங்குடுதீவு பலநோக்கு கூட்டுறவுச் சங்கம்
- யாழ் மாநகர ப. நெ. கூ. வி. கூ. சங்கம் (8447)
- நாதன் ஒட்டுத்தொழிற்சாலை நல்லூர்
- பி. ஐ. பெர்னாண்டோ - கண்பரிசோதகர் / பல் கட்டுபவர்
- க. செ. கைலாசபிள்ளை அன்சன்ஸ் யாழ்வீதி
- ஜெயஅழகு மாடம்-177A, மின்சாரநிலையவீதி
- அம்பிகாபதி அழகுசாதன மாளிகை - அம்மன் வீதி
- School of Business Administration
- முழங்கும் முரசினை வழங்கும் கலைஞர் வேல் ஆனந்தன் ஆடல் அணியினர்

பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்
நல்லூர் கிளை நூலகம்

# சீதனத்தினால் பெண் மட்டுமல்ல ஆணும் பாதிக்கப்படுகின்றான்

## சீதன ஒழிப்பு கருத்தரங்கில் உரை

(தென்மராட்சி)

எங்களுடைய போராட்டம் ஆரம்பிக்கப்பட்டு 22 வருடங்கள் ஆகின்றன. எமது நாட்டை எதிரியிடம் இருந்து முழுமையாக கைப்பற்ற நெருங்கிக் கொண்டு இருக்கும் வேளை எமது தேச விடுதலையோடு சமூக விடுதலையையும் வென்றெடுக்க தமிழீழமக்கள்மத்தியில் ஒருபாரியசமூகப் பிரச்சினையாக உருவெடுத்துள்ள சீதனப் பிரச்சினையை ஒழிக்க அனைவரும் ஒத்துழைக்க வேண்டும்

இவ்வாறு கிராமம்தோறும் இடம் பெற்றுவரும் சீதன ஒழிப்பு கருத்தரங்கில் கடந்த 31ஆம்திகதி அன்று வரணியில் இடம்பெற்ற கருத் தரங்கில் சீதனத்தைப் பற்றி விளக்கிய மகளிர் அமைப்பைச் சேர்ந்த யாழ் மாவட்ட சமூக மேம்பாட்டுப் பொறுப்பாளர் செல்வி ரூபிகா அவர்கள் கூறினார். கொடிகாமம் மகளிர் வட்டப் பொறுப்பாளர் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் கொடிகாமம் வட்டப் பொறுப்பாளர் அமுதனும் உரை நிகழ்த்தினார்.

தொடர்ந்து அவர் உரை நிகழ்த்துகையில் இந்த சீதன ஒழிப்பு சட்டத்தை நாம் எழுதிவிட்டு தீர்வு கண்டுவிட்டோம் என்று உங்களிடம் வரவில்லை. எமது மண்ணில் நடைபெறுகின்ற சீதனக் கொடுமைகளை மக்களாகிய நீங்கள் உங்களின் கண்முன்னாலேயே பார்க்கின்றீர்கள் உங்களிடம் நாம்கருத்துக்கள், அபிப்பிராயங்களை உங்களோடு கலந்து பரிமாறத்தான் இப்படிப்பட்ட வீதி நாடகமும் கருத்தரங்கும் மேற்கொண்டு வருகின்றோம்.

இந்த சீதனப்பிரச்சினை ஒரு பெண்ணை மட்டும் சார்ந்து நிற்பதாக நாம் கூறவில்லை இந்த சீதனப் பேயினால் ஆண், பெண் இருவருமே பாதிப்படைகின்றார்கள். ஒரு ஆண் தனது சகோதரிக்காக தனது வாழ்க்கையை வெறுத்து சிரமப்பட்டு உழைத்து கொடுக்க வேண்டிய கட்டாயமும் இந்தச் சமூகத்தில் இருக்க வேண்டியுள்ளது

வறுமைப்பட்ட ஒரு குடும்பத்தை எடுத்தால் பல பெண் பிள்ளைகளுடன் ஒரு ஆண் பிறந்தால் அவர் சீதனத்துக்கு என்ன செய்வது? இந்த வேளையில் பெண்களைப் பெற்றெடுத்த பெற்றோர்கள் உள்ளடக்கிய எண்ணற்ற குடும்பங்கள் இப்பிரச்சினையால் பாதிக்கப்பட்டுள்ளன.

ஆரம்பத்தில் பெண்கள் அடிமைப்பட்டவர்கள் என்று சமுதாயம் கூறியது ஆனால் தற்போது நாம் ஒரு எதிரியின் முகாமைத் தேடிச் சென்று ஆண்களுக்கு சரி நிகராக நின்று சண்டையிட்டு உலகிலேயே தமிழ்ப் பெண்களின் வீரத்தினை வெளிப்படுத்தி நிற்கிறோம்.

இந்தியாவில் கூட இச் சட்டம் அமுல் படுத்தப்பட்டது; ஆனால் அரசின் சட்டதிட்டம் திடமாக இராததால் அது வெற்றியளிக்கவில்லை ஆனால் எமது சீதன ஒழிப்பு திட்டம் தற்போது உடன் நடைமுறைப்படுத்தாவிடினும் ஓரிரண்டு வருடங்களில் இதை ஒழிக்க முடியும் அதற்கு மக்களின் ஒத்துழைப்பு தேவை:

நீங்கள் நினைக்கலாம் சீதன ஒழிப்பு எப்படி ஒழிப்பது சாத்தியமாகும்? என்று ஆனால் எமது போராட்டமும் அப்படித்தான் ஆரம்பித்தது ஆனால், கடந்த 22 வருடங்களில் எமது போராட்டத்தின் வளர்ச்சி ஒரு பெரும்பரிமாணத்தை அடைந்து இருக்கின்றது.

எமது போராட்ட மூலம் அடுத்த சந்ததியாவது சுதந்திரமாக எமது மண்ணில் வாழவேண்டும் என்று போராடுவது போல சீதனமும் அடுத்த சந்ததியில் அடியோடு இல்லாமலாகவேண்டும்.

சமூகத்தில் சாதி எவ்வளவு மூடநம்பிக்கையாக இருக்குதோ அதேபோல் தான் சீதனப் பிரச்சினையும். இதை மாற்றமுடியும். ஆனால் மக்கள் ஒத்துழைப்பு தேவை. ஆகவே இனியும் பார்த்திராது தமிழீழ மக்களின் மத்தியில் ஒரு பாரிய சமூகப்பிரச்சினையாக உருவெடுத்துள்ள இச் சீதன கொடுமையை ஒழிக்க அனைவரும் இணைய வேண்டும் என்றார். இந் நிகழ்வில் தென்மராட்சி கலை பண்பாட்டுக் கழகத்தின் சீதன ஒழிப்பு தெருக்கூத்தும் சீதன அம்புகள் என்ற ஒளிப்பதிவு நாடாவும் காண்பிக்கப்பட்டது. (86)

---

## 90ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்

(05-06-1994)



### திரு. வடிவேல் ஜெயபாலசிங்கம் (ஜெயா)

(திருப்பூர், மயிலிட்டி)

| திருப்பூரின் தியாக மைந்தனாக: | கடற்படையின் வேட்டுக்கு இலக்காக: |
|---|---|
| 14-03-1965 | 07-03 1994 |

குடும்பத்தின் குலவிளக்கே - ஒளிவிளக்கே !
குடும்பத் தலைமைக்கு வரைவிலக்கணம் தந்த
பெருமனத்தானே !- குணத்தானே !
தானுண்டு, தன்குடும்பம் உண்டு
என்ற சுயநல மற்று, நாமுண்டு
எம் உடன்பிறப்புக்கள் உண்டு
என்ற களங்கமற்ற தூய
உள்ளத்தோடு, நாமும், உடன் பிறப்புக்களும் நல்ல வாழ்வு வாழ வழி சமைத்தவரே - அதற்காக உழைத்த உத்தமரே !

எம் இதயதெய்வம், வாழ்வின் வழிகாட்டியின் அந்தியேட்டி நிகழ்வு நாளை (05-06-94) ஞாயிற்றுக்கிழமை நாகர் கோவில் மயிலிட்டி முகாமில்லத்தில் நடைபெறும். அவ்வேளை உற்றார், உறவினர், நண்பர்கள் யாவரையும் பங்கு கொள்ளுமாறு வேண்டுகிறோம்,

நன்றி,

அநியாய இழப்பால் துவண்டு போயிருக்கும்,
அன்புத் தாய், மனைவி, பிள்ளைகள்,
பாசமிகு உடன் பிறப்புக்கள்,
மச்சான்மார்கள், அண்ணிமார்கள்,
மருமக்கள்.

நாகர் கோயில்,
மயிலிட்டி முகாம்.
(8433)

---

## ஓராண்டு நினைவஞ்சலி

---

## முக்கிய அறிவித்தல்

### வடபிராந்திய வர்த்தகர் சங்கங்களின் சமாஜம்

வலிகாமம் கோட்டத்திற்கு உட்பட்ட சகலதுறை வர்த்தகர்களுக்கும் யாழ். மாவட்ட நிதித்துறையினரின் விசேட கலந்துரையாடல் 04-06-94 சனிக்கிழமை மாலை 3.00 மணிக்கு யாழ் இந்துக் கல்லூரி குமாரசுவாமி மண்டபத்தில் நடைபெறவுள்ளதால் சகல வர்த்தகர்களும் தவறாது இக் கலந்துரையாடலுக்கு சமுகம் கொடுக்குமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

நன்றி

இங்ஙனம்

வடபிராந்திய வர்த்தகர் சங்க சமாஜம்,
21, மேல்மாடி,
சிறப்பு அங்காடி,
யாழ்ப்பாணம்.
02-06-94

தலைவர்
வடபிராந்திய வர்த்தகர் சங்கங்களின் சமாஜம்

(சி 9587)

---

## கல்விக் கண்காட்சி

(கொழும்புத்துறை)

யாழ் புனித பத்திரிசியார் கல்லூரியின் மாபெரும் கல்விக் கண்காட்சி எதிர்வரும் 6ஆம் திகதி திங்கட்கிழமை, 7ஆம் திகதி செவ்வாய்க்கிழமை, 8ஆம் திகதி புதன்கிழமை ஆகிய மூன்று தினங்களிலும் காலை முதல் மாலை வரை இடம்பெறும் எனக் கல்லூரி அதிபர் வண. அருட்தந்தை திரு. ஐ. பேர்னாட் தெரிவித்துள்ளார்.

இந்நிகழ்வில் தமிழர் பிரதேச பொருளாதார, சமூக மொழி வளமும், தமிழில் சித்தமருத்துவ இயலும், பண்டைய நாகரிகத்தின் விழுமியங்கள், கணித, விஞ்ஞா

---

## மன்றில் பொய்ச்சாட்சி நபருக்கு அபராதம் விதிப்பு

(தென்மராட்சி)

ஒருவர் மற்றைய ஒருவருக்கு சைக்கிளுக்குக் காற்று அடிக்கும் பம்மினால் அடித்துக் காயப்படுத்தியமைக்காகக் காவல்துறையினர் இருவரையும் மன்றில் முற்படுத்தினர்.

இத்தாவில் பளைப் பகுதியைச் சேர்ந்த இவ் இரு நபர்களுக்கும் இடையிலான வழக்கினை சாவகச்சேரி நீதிமன்று விசாரணையை மேற்கொண்டபோது குற்றவாளி குற்றத்தினை ஒப்புக்கொண்டார், இழப்பீட்டுத் தொகையாக 1500 ரூபா கட்டும்படியும் அபராதமாக 1000 ரூபா கட்டும்படியும் மன்று தீர்ப்பளித்தது.

மேற்படி வழக்கில் மனுதாரர் தரப்பில் ஒருவர் பொய்ச்சாட்சி சொன்னதைக் கண்டுபிடித்த மன்று பொய்ச்சாட்சி கூறியவருக்கு அபராதமாக 1000 ரூபா கட்டும்படி தீர்ப்பளித்தது (86)

---

## நரோமா பயணிகளுக்கு

(யாழ்ப்பாணம்)

நரோமா கப்பல் மூலம் வரும் 21ஆம் திகதி பயணம் மேற்கொள்ள இருந்த பயணிகள் வரும் 18-ம்திகதிதமது பயணத்தை மேற்கொள்வதற்கு ஆயத்தம் செய்யுமாறு கேட்கப்பட்டுள்ளனர்

மேற்படி கப்பல் 18ஆம் திகதியே பருத்தித்துறையில் இருந்து புறப்படுமென மேலதிக அரசாங்க அதிபர் தெரிவித்துள்ளார்.

---

## அறிவித்தல்

### யாழ் மாவட்டச் சூழல் பாதுகாப்புக் குழு

பிரதேசச் செயலர்களினால் நடாத்தப்படும் கட்டுரை ஓவியப் போட்டிகளின் விடயங்கள் பின்வருமாறு:-

**15 வயதும் அதற்கு மேற்பட்டோரும்**

01. நிலைத்து நிற்கும் பொருளாதாரமும் சூழலும்:
02. காடு வளர்ப்பும் தமிழீழச் சூழலும்:
03. புவி- வளிமண்டல வெப்பமதிகரிப்பு:
04. 'இயற்கையை நீ அழித்தால் இயற்கையால் நீ அழிவாய்'
05. ஏழைகளின் பார்வையில் சுற்றுச் சூழல்.

**15 வயதும் அதற்கு கீழ்ப்பட்டோரும்**

01. சுற்றுச் சூழலைப் பேணுதலின் அவசியம்.
02. வளி மண்டலம் மாசுபடுதல்.
03. தரைக்கீழ் நீர் மாசுபடல்.
04 வனநாடே வளநாடு.
05. உடலுக்கு உரமாகும் உணவே விஷமானால்.

கட்டுரைப்போட்டி 19 06 94ஆம் திகதி முற்பகலிலும் ஓவியப்போட்டி 19.06.94ஆம் திகதி பிற்பகலிலும் பிரதேசச் செயலர்களினால் தெரிவு செய்யப்படும் நிலையங்களில் நடைபெறும்.

மேலே தரப்பட்டுள்ள விடயங்களில் ஒன்றினைப் பற்றிக் கட்டுரை எழுதவும் ஓவியம் தீட்டவும் போட்டியாளர்கள் வேண்டப்படுவர். மேலதிக விபரங்களைப் பிரதேசச் செயலர்களிடமிருந்து பெற்றுக் கொள்ளுக.

ஒப்பம் - கா. மாணிக்கவாசகர்

சுந்தரம் டிவகலாலா
செயலாளர்
யாழ் மாவட்டச் சூழல்
பாதுகாப்புக்குழு
பிரதேச உள்ளூராட்சி
உதவி ஆணையாளர்

தலைவர்
யாழ் மாவட்டச் சூழல்
பாதுகாப்புக்குழு
அரசாங்க அதிபர்
யாழ் மாவட்டம்.

## ஓராண்டு நினைவஞ்சலி



செல்வி

**ஞானாம்பிகை சின்னத்தம்பி**

இசையாசிரியை, இசைக்கலைமணி, சங்கீதகலாவித்தகி
யா/இயற்றாலை அ. மி. த. க. பாடசாலை,
யா/நாவற்காடு கணபதிப்பிள்ளை வித்தியாலயம்.

சேயாய் முன்னாள்: 1966 - 10 - 22

தெய்வமாய் இந்நாள்: 1993 - 06 - 16

ஓடி மறைந்ததோ ராண்டு — நெஞ்சம்
உன்னைப் பிரிந்து கலங்குதே ஈண்டு
நாடி இசையில் திளைத்தோம் — உனை
ஞானாம் பிகைஎன நாங்கள் அழைத்தோம்
தேடி உனைஎங்கு காண்போம் — எந்தத்
தேசத்தி லேசென்று நாமுனைச் சேர்வோம்
வாடி நிலைகெட்டுப் போனோம் — உனை
வைத்து வணங்கிடும் மானிடர் ஆனோம்
அத்தன் திருவடி சேர்க — என்றும்
ஆடும் பரமனின் பக்கலில் வாழ்க
நித்திய இன்பங்கள் பெற்று — என்றும்
நீடு வளருக நிம்மதி யுற்று!

கரம்பைக்குறிச்சி,
வரணி.

உன் நினைவில் வாடும்
குடும்பத்தினர்

(8441)

---

சிறப்பு அங்காடி,
யாழ்ப்பாணம்.
02 - 06 - 94

சமாஜம்

(சி 9587)

---

### தமிழீழ மாணவர்
## எழுச்சி நாள்
## 05 - 06 - 1994

மாணவர் சிறந்தால்
தாயகம் சிறக்கும்
தாயகம் சிறந்தால்
தமிழ்க்குலம் சிறக்கும்

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்

கிளி/ பளை மகாவித்தியாலயம்
அதிபர், ஆசிரியர், மாணவர்கள்

(சி-9589)

---

## "விற்பனை உதவியாளர்கள் பயிலுநர்கள்"

1. விற்பனை உதவியாளர்கள் பயிலுநர்களை தெரிவு செய்வதற்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன
2. விண்ணப்பப் படிவங்கள் ரூபா 10/ செலுத்தப் பெற்று 10-06-94 ந. ப. 12மணிக்கு முன்பு கிடைக்கக்கூடியதாக அனுப்பி வைக்க வேண்டும்
3. கல்வித்தகைமை : குறைந்தது 8ஆம் வகுப்பு சித்தியடைந்திருக்க வேண்டும் (பிரதி இணைக்கப்பட வேண்டும்)
4. வயது: 22—35 (பிரதி இணைக்கப்பட வேண்டும்)
5. வசிப்பிடத்தகைமை : சங்க எல்லைப் பரப்பில் நிரந்தரமாக வசிப்பவராக இருக்கவேண்டும்(கிராம சேவகரின்அத்தாட்சிப்பத்திரம் இணைக்கவேண்டும்)
6. பயிற்சிக்காலம் : 2 வருடம்
7. படி : பயிற்சியின்போது நாள்ஒன்றுக்கு ரூபா50/ (எல்லாம் உட்பட படியாகக் கொடுக்கப்படும்)

—பொது முகாமையாளர்

வலி கிழக்கு வட பகுதி
ப. நோ. கூ. சங்கம்
அச்சுவேலி.

(சி-9584)

---

...தேச பொருளாதார, சமூக மொழி வளமும், தமிழில் சித்தமருத்துவ இயலும், பண்டைய நாகரிகத்தின் விழுமியங்கள், கணித, விஞ்ஞானத்தின் வியத்தகு விந்தைகள், வங்கியில் நடைமுறைச் செயற்பாடுகள், விநோத விளையாட்டுக்கள், இசை நிகழ்ச்சிகளும் இக் கண்காட்சியில் இடம்பெறும். (24)

---

செயலாளர்
யாழ் மாவட்டச் சூழல்
பாதுகாப்புக்குழு
பிரதேச உள்ளூராட்சி
உதவி ஆணையாளர்
யாழ்ப்பாணம்/ கிளிநொச்சி மாவட்டங்கள்.

யாழ் மாவட்டச் சூழல்
பாதுகாப்புக்குழு
அரசாங்க அதிபர்
யாழ் மாவட்டம்.

உள்ளூராட்சித் திணைக்களம்,
யாழ்ப்பாணம்.
94. 06. 02

(சி 9588)

---

### இரட்டைச் சூட்டடுப்பு உற்பத்தி நிலையத்தில் (குளப்பிட்டி)

## வேலை வாய்ப்புகள்

- மட்கல உற்பத்தியில் ஈடுபட்டுள்ளோரும், ஆர்வமுள்ளோரும் விண்ணப்பிக்கலாம்.
- ஆண், பெண் இருபாலாரும் விண்ணப்பிக்கலாம்.
- வயதெல்லை இடையாது.
- உற்பத்திக்கான பயிற்சி இந்நிலையத்தில் வழங்கப்படும்.
- பயிற்சியின் போது ஊக்குவிப்பாக உதவுதொகை வழங்கப்படும்.
- பயிற்சியின் பின் நிலையத்திலேயே ஒப்பந்த அடிப்படையில் வேலை வாய்ப்பு வழங்கப்படும்.
- பயிற்சியின் பின் சுயமாக தொழில் செய்ய விரும்பின் அதற்கான முதலீட்டு உதவிகள் வழங்கப்படும்.

நேரில் தொடர்பு கொள்ளுங்கள்

## "சக்திப்பகுதி"

தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம்,
அரசியல்துறை - தமிழீழ விடுதலைப்புலிகள்,

காங்கேசன் துறை வீதி,
தாவடிச்சந்தி,
தாவடி.
தமிழீழம்.

(சி-9566)

பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்
நல்லூர் கிளை நூலகம்.

### சிந்தனைக்கு

பிழையை திருத்த மறுக்கும்போதே
அது தவறாகிறது
- ஆர்லண்டோ பேட்டிஸ்ட்டா

ஈழநாதம்

81, மகேந்திரா வீதி, யாழ்ப்பாணம் 04-06-1994
தொலைபேசி
ஆசிரியபீடம் 025 - 2839 நிர்வாகபீடம் 2024
தபால் பெட்டி எண் - 05

## சமூக நோக்கு தேவை

யாழ். குடாநாட்டில் விற்பனைக்கு இருந்த பாவனைக்கு உதவாத நெல்லிரசப் போத்தல்கள் உணவு, மருந்துப் பரிசோதகர்களால் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. இவ்வாறு கண்டுபிடிக்கப்பட்ட நெல்லிரசப் போத்தல்கள் சிலவற்றில் பூச்சி புழுக்கள் காணப்பட்டதாகவும் அறியவந்துள்ளது.

சிறிலங்கா அரசு விதித்துள்ள பொருளாதாரத் தடையின் காரணமாகவும், தொடர்ந்து நிலவும் யுத்த சூழ்நிலையாலும், சுய சார்புப் பொருளாதார அபிவிருத்தி என்பதன் அடிப்படையிலும் உள்ளூர் உற்பத்திகள் வரவேற்கப்பட வேண்டியவை மட்டுமல்ல, ஊக்குவிக்கப்பட வேண்டியவையும்தான். ஆனால், இவ்உற்பத்திகளின் தரம் சிலவேளை சற்றுக் குறைவானதாக இருந்தாலும் அவை சுகாதார முறையில் தயாரிக்கப்பட்டவையாகவும், உடலுக்குக் கேடு விளைவிக்காதவையாகவும் இருத்தல் அவசியமாகும்.

உள்ளூர் உற்பத்திகளை ஊக்குவித்தல் என்ற ரீதியில் பாவனைக்கு உதவாத பொருள்களையும், மக்களின் ஆரோக்கியத்திற்கு ஒவ்வாத பொருள்களையும் விற்பனைக்கு அனுமதிக்க முடியாது இது நோயை விலை கொடுத்து வாங்குவதற்கு ஒப்பானதாகும்

இந்நிலையில், யாழ்ப்பாணத்தில் உற்பத்தி செய்யப்படும் நுகர் பொருள்கள் உற்பத்தி விற்பனை தொடர்பாக மிகவும் கவனமாக இருத்தல் அவசியமானதாகும்; போதிய மூலப்பொருள் இன்மை, இரசாயனப் பொருள் தொற்று நீக்கிகள் இன்மை மற்றும் மின்சாரம், இயந்திர சாதனங்கள் என்பன இன்மை போன்றவை தரமானபொருள் உற்பத்திக்குத் தடையாக இருக்கலாம் இதற்காக நுகர்பொருள்களை சுகாதாரமற்ற ரீதியிலும், கலப்படம் என்ற ரீதியிலும் தயாரிக்க முடியாது.

ஆகையினால் கண்டுபிடிக்கப்பட்ட நெல்லிரசம் போன்ற தரமற்ற சுகாதாரத்திற்கு கேடு விளைவிக்கும் பொருள்களைத் தயாரிக்கும் உற்பத்தி நிலையங்கள் மீது கட்டுப்பாடுகள் கொண்டு வரப்படுதல் அவசியமானதாகும். அத்தோடு, பரிசோதனையாளர்கள் அண்மையில் கைப்பற்றிய நெல்லிரசப் போத்

# சூழல் பாதுகாப்பு மாதம் கடைப்பிடிக்க ஏற்பாடு

(தொல்புரம்)

உலகச் சூழல் பாதுகாப்பு தினத்தை முன்னிட்டு யாழ். மாவட்டத்தில் ''சூழல் பாதுகாப்பு விழிப்புணர்வு மாதம்'' கொண்டாடப்படவுள்ளது.

நாளை 5ஆம் திகதியிலிருந்து யூலை மாதம் 5ஆம் திகதி வரை நடைபெறவுள்ள இந் நிகழ்வை யாழ். மாவட்ட சூழல் பாதுகாப்புக் குழுவினர் ஒழுங்கு செய்துள்ளனர். சூழல் பாதுகாப்புச் சம்பந்தமான விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் பாடசாலை மட்டத்திலும், பிரதேச செயலகங்கள் மட்டத்திலும் இது சம்பந்தமான கட்டுரைப் போட்டிகள், ஓவியப் போட்டிகள், சுலோகங்கள் தயாரித்தல் போன்றவைகளை நடாத்தி வெற்றி பெறுபவர்களுக்கு பரிசில்களும் வழங்கப்படவுள்ளன.

மேற்படி போட்டிகள் சம்பந்தமான விபரங்களை கல்வித் திணைக்களத்திலும், பிரதேச செயலர்களின் காரியாலயங்களிலும், பிரதேச உள்ளூராட்சி உதவி ஆணையாளரின் அலுவலகத்திலும் பெற்றுக் கொள்ளலாம் என மாவட்ட சூழல் பாதுகாப்புக் குழுவினால் தெரிவிக்கப்பட்டுள்ளது. (41)

# உலக சூழல் தினத்தில் சிரமதானப் பணி

உலக சூழல் தினத்தை முன்னிட்டு தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தால் சிரமதான பணிகள் மேற்கொள்ளப்படவுள்ளன இவற்றில் வலிகாமம் கோட்டத்தில் மருதனாமடம் சந்தி தொடக்கம் உரும்பராய் சந்தி வரையும், சுன்னாகம், புன்னாலைக்கட்டுவன் வீதியும், தென்மராட்சி கோட்டத்தில் புத்தூர் சந்தி தொடக்கம் ஆசைப்பிள்ளை ஏற்றம் வரையும், வடமராட்சி கோட்டத்தில் யாக்கரை வீதியும், தீவகக் கோட்டத்தில் ககைதீவு பகுதியும், அத்துடன் கோண்டாவில் சந்தி தொடக்கம் இருபாலை சந்தி வரையும் வீதிகள் சிரமதான பணிகள் மூலம் புனரமைக்கப்படவுள்ளன இச் சிரமதான பணிகள் தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவன பணியாளர்களும், உற்பத்திக் குழுக்களும், மகாஜனக் கல்லூரி, மைலணி பாடசாலை, யாழ் வீரசிங்கம் மகா வித்தியாலயம், யாக்கரை பாடசாலை, ஆசிரியர் மாணவ மாணவிகள் ஆகியோர் இச் சிரமதான பணிகளில் ஈடுபடவுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

## உலர் உணவு முத்திரை

(தொல்புரம்)

வலிதென்மேற்கு சண்டிலிப்பாய் பிரதேச செயலர் பிரிவில் தங்கியுள்ள இடம் பெயர்ந்தவர்களுக்கான உலர் உணவு முத்திரைகள் வழங்கப்படவுள்ளன.

மேற்படி பிரதேச செயலர் பிரிவில் தங்கியிருந்து 4 ஆம் கட்ட உலர் உணவு முத்திரைகள் பெற்ற குடும்பங்களுக்கு 5 ஆம் கட்ட முத்திரைகள்

## புலிகளின் குரல் நிகழ்ச்சி நிரல்

**1994.06.04**
சனி இரவு

08 01 - அறிவியற்கலசம்
08.10 - தாயகப்பாடல்கள்
08.25 - நேயர்கடிதங்கள்
08.30 - செய்திகள்
08.40 - சித்திரம் -''சீதனக் கொடுமை''

**1994.06.05**
ஞாயிறு காலை

07.02 - மாவீர வணக்கம்
07.15 - சனத்தில் மலர்ந்தவை

# பால் உற்பத்தி அதிகரிப்பிற்கு கலப்பின கறவை இனவிருத்தி

கறவைகளிலிருந்து பெறப்படும் பால் உற்பத்தி, அதிகரித்துவரும் சனப்பெருக்கத்திற்கு ஈடுகொடுக்க முடியாத நிலை வளர்முக நாடுகளெங்கும் பரவலாகப் காணப்படும் ஒரு குறைபாடு. ஆயினும் ஒவ்வொரு நாடும் தன் தன் வசதிக்கேற்ப ஆக வேண்டிய நடைமுறைகளைக் கையாண்டு பால் உற்பத்தியைப் பெருக்கி மக்களின்உடல் நலத்தையும் சமூக பொருளாதார நிலையையும் முன்னேற்ற முயற்சி செய்கின்றது எவ்வாறாயினும் பொதுவாகப் பால் உற்பத்தியைப் பெருக்க மூன்று வழிகள் உள்ளன.

1. பால் தரும் கறவைகளின் இறப்பைக் குறைத்து அவற்றின் எண்ணிக்கையை அதிகரித்தல்,

2. போதுமான அளவு நல்ல உயர்ரகத் தீனூட்டிச் சுரக்கும் பாலின் அளவை அதிகரித்தல்.

3. பாரம்பரிய உற்பத்தித் திறனை அதிகரித்தல்'

முதல் இரண்டு வழிகளிலும் பெறக்கூடிய உற்பத்தி அதிகரிப்பு ஒரு மட்டுப்படுத்தப்பட்ட அளவுக்கே இருக்கும். ஆனால் மூன்றாவது வழியில் தொடர்ச்சியான நடவடிக்கைகளினால் உற்பத்தித்திறனும் தொடர்ச்சியாக அதிகரிக்க வாய்ப்புண்டு.

**அ. உற்பத்தித் திறன் அபிவிருத்தி**

சாதாரண ஊர்ப்பசுஒன்றை எடுப்போமானால் இது வருடமொன்றிற்கு ஆகக் கூடியது 270 லீற்றர் பாலைத் தரும். இவ்வாறான உற்பத்தித்திறன் குறைந்த பசுக்கூட்டத்திலிருந்து அதிக பாலைத் தரும். பசுக்களைத் தெரிந்து எடுத்து இனப் பெருக்கம் செய்து மொத்த உற்பத்தியை அதிகரிக்க எத்தனிப்போமேயானால் 200 வருடங்கள் செல்லும் (தற்போதைய ஐரோப்பிய இனங்களின் தரத்தை எட்டுவதற்கு) எனவே இது கைக் கொள்ளக்கூடிய ஒரு நடவடிக்கை அல்ல, அப்படியானால் மாற்று நடவடிக்கை என்ன? இது தான் கலப்பினம் உண்டாக்குவதாகும்.

**ஆ. அதி உற்பத்திக்கும் பசுவொன்றை பராமரித்தல்**

தனி ஒரு பசுவை எடுத்துக் கர்ப்பங்களைத் தரித்து அதாகன்றுகளை ஈனவும் செய்வது அதிக அளவு முறைகள் வேண்டும்.

**கடைப்பிடிக்க வேண்டிய இலக்குகள்**

| | யேசி | இந்திய இனம் |
|---|---|---|
| 1. இனப் பெருக்கத்திற்குகந்த முதிர்ச்சி நிலை | 15 மாதம் | 18 - 22 மாதம் |
| 2. முதற்கன்று ஈனும் வயது | 24 மாதம் | 27 - 31 மாதம் |
| 3. பால் கறக்கும் காலம் | 305 நாள் | 305 நாட்களுக்கு ஆகக் கிட்டிய |
| 4. வற்றுக் காலம் | 60 | காலம்60 நாட்களுக்கு கிட்டிய காலம் |
| 5 அடுத்த இரு கன்றீனுவதற்கு இடைப்பட்ட காலம் | 365 | 15 - 18 மாதத்திற்குக் கூடாத காலம் |

**இவ்விலக்குகளை அடைவதற்குச் சில வழிகாட்டிகள்;-**

1. பசுக்கன்றுகளைப் பிறந்த காலம் தொடக்கம் நல்ல முறையில் தீவனம் கொடுத்து வளர்த்தல் (கடும்பு பாலும் கொடுப்பது உள்ளடங்கலாக)

2. நோய் வராது தடுப்பு மருந்துகளைக் காலத்திற்குக் காலம் கொடுத்தல்.

3. ஒட்டுண்ணிகள் தொற்றாது தடுத்தல்,

4. நோய் கண்டவுடன் தகுந்த பரிகாரம் செய்தல்.

5. இனத்தின் முதிர் நிலை நிறையின் 2|3 பங்கு நிறை அடையும் பருவத்தில் சினைப் படுத்தல் உ+ம் யேசி 200-250 கி கிராம்.

6. வேட்கை அறிகுறிகளை அறிந்து தவறாது சினைப்படுத்த நடவடிக்கைகள் எடுத்தல்,

7. மூன்று முறைகளுக்கு மேல் சினைப்படுத்த எத்தனித்து பின்னும் கருத்தரித்த அறிகுறிகள் இல்லாத கன்றை அல்லது பசுவைத் தகுதியான மிருக வைத்தியரிடம் காண்பித்து வேண்டிய பரிகாரங்களைச் செய்தல்.

8. சினைப்படுத்தப்பட்டு 2 மாதங்களாக வேட்கையை நாடாதிருக்கும் கன்றை | பசுவைச் சினைப் பரிசோதனை செய்வித்தல்.

9. சினைப்பட்ட பசுக்களுக்குப் போதியளவு வெளிச்சமும் உடற் பயிற்சிக்கான வசதியும் இடைக்க வழி செய்தல்

10. கன்று ஈனுவதற்கு முந்திய இரு மாதங்கட்கும் அதிக தீன் கொடுத்தல் பால் தரும் பசு வாயின் பாலைக்கறப்பதை தவிர்த்தல்

11. கர்ப்பச் சிதைவு ஏற்படினும் மிருக வைத்தியருக்கு அறிவித்து ஆகவேண்டிய நடவடிக்கைகளை எடுத்தல்

12. கன்று ஈன்ற பின் அசாதாரண சீத வெளியேற்றம் இருந்தால் பசுவை மற்றைய பசுக்களின்று பிரித்துத்தனியே பராமரித்து மிருக வைத்தியரின் அனுசரணையுடன் மாற்று நடவடிக்கைகளை எடுத்தல்

13. இவ்வாறு அசாதாரண வெளியேற்றம் இருந்தால் சினைப்படுத்த எத்தனிக்காதிருத்தல்.

14. சதாரணமான வெளியேற்றம் இருந்தால் கன்று ஈன்று 45-90 நாட்களுக்குமிடையில் சினைப்படுத்திக் கொள்ளுதல்

15. எல்லாவற்றிற்கும் பதிவேடுகள் வைத்திருத்தல்.

- தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம்

# பாதை ஓர வியாபாரிகளிடம் பாவனைக்கு உதவாஉணவு

பருத்தித்துறை அரசினர் ஆதாரவைத்திய சாலைக்கு முன்பாக உள்ள பாதை ஓரத்தில் வியாபாரம் செய்யும் சில வியாபாரிகளிடம் பாவனைக்கு உதவாத, பல வித தொற்று நோய்கள் பரவக்

இத்தொண்டர் குழு இப் பாதையோர வியாபாரியிடம் விற்பனைக்கு இருந்த பூச்சி புழுக்கள் இருக்கும் ஏழு நெல்லி இரசப் போத்தல்

தல் அவசியமானதாகும். அத்தோடு, பரிசோதனையாளர்கள் அண்மையில் கைப்பற்றிய நெல்லிரசப் போத்தல்களில் லேபல் கூட ஒட்டப்படவில்லை எனச் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது. இந்நிலையில், இவற்றை யார் உற்பத்தி செய்தார்கள் என்பது கூட குழப்பத்தை ஏற்படுத்தக் கூடியதே. இவ்வாறானதொரு நிலை ஏற்படவும் அனுமதித்தல் ஆகாது.

இதேசமயம், வடபகுதிக்கு தென்னிலங்கையில் இருந்து வரும் சிலபொருள்களும் பாவனைக்குதவாதவையாகவும், காலம் கடந்தவையாகவும் வந்து சேருகின்றன. பொருள்கள் பலவழிகளில் வருவதினாலும், அனுபவமற்றவர்கள் கொள்வனவு செய்வதினாலும், கொள்வனவு செய்த பின்னர் நீண்ட காலம் தேங்கி இருப்பதினாலும் இவ்வாறானதொரு நிலை ஏற்படுவதுண்டு. சிலசமயம் காலக்கெடு முடியும் தருவாயிலுள்ள பொருள்களை குறைந்த விலையில் கொள்வனவு செய்து கொண்டு வரப்படுவதும் உண்டு.

இவையும் வடபகுதிக்குள் தரமற்ற, பாவனைக்கு உதவாத பொருள்கள் வந்து சேரக் காரணமாகின்றன. இவையும் ஏதோ ஒருவகையில் உடலுக்குக் கேடு விளைவிப்பவையாகவே உள்ளன, இந்நிலையில், இப்பொருள்கள் குறித்தும் கவனத்திற் கொள்ள வேண்டியது அவசியமாகும்.

இதேசமயம் இவ்விவகாரத்தில் தனியாக உணவு மருந்துப் பரிசோதகரோ அன்றி இது குறித்து பொறுப்பாக இருப்பவர்களோ மட்டும் இலகுவில் இதனை கட்டுப்படுத்திவிட முடியாது. இதற்கு வியாபாரிகளின் ஒத்துழைப்பு அவசியம் என்பதோடு பொதுமக்களும் பூரண உதவி நல்க வேண்டும்.

வியாபாரிகள் லாபநோக்கத்தை மட்டும் கொண்டு செயற்படாது சமூக நோக்கிலும் சிந்திக்க வேண்டும். பழுதடைந்த, காலம்கடந்த பொருள்களைக்கொள்வனவு செய்யாததோடு, அவ்வாறான பொருள்கள் விற்பனை செய்வதையும் கைவிட வேண்டும். அவ்வாறு செய்வது தமது சமூகத்திற்குச் செய்யும் துரோகம் என்பதை உணர வேண்டும்,

இதேசமயம், மக்களும் விழிப்பாக இருத்தல் அவசியமாகும். பொருள்களைக் கொள்வனவு செய்யும் போது அவற்றின் பாவனைக்குரிய கால வரையறை, உற்பத்தியாளர்கள் யார் என்பனவற்றைக் கவனத்திற் கொண்டு கொள்வனவு செய்ய வேண்டும். காலம் கடந்த பொருள்கள், லேபலற்ற பொருள்கள் என்பனவற்றைத் தவிர்த்தல் வேண்டும். அவ்வாறு இல்லாது விட்டால் சில சமயம் காசு கொடுத்து நஞ்சு வாங்குவதாகவே முடிந்து விட்டாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை.

கள் பெற்ற குடும்பங்களுக்கு 5 ஆம் கட்ட முத்திரைகள் அவ்வப்பகுதி கிராமசேவை அலுவலர்களால் வழங்கப்படவுள்ளதால் இது சம்பந்தமாக உரிய அலுவலர்களிடம் தொடர்பு கொள்ளுமாறு தெரிவிக்கப்படுகிறது (41)

07.15 - களத்தில் மலர்ந்தவை
07 30 - செய்திகள்
07,35 - பத்திரிகைச் செய்திகள்
07.40 - களத்தில் மலர்ந்தவை நிகழ்ச்சியின் தொடர்ச்சி.

தல்

தனி ஒரு பசுவை எடுத்துக் கொண்டாலும் அது தன்னால் அதிகூடிய அளவு பாலை அதன் சீவிய காலத்தினுட் கா போதிய அளவு நல்வதின் பெறவும் நோய் நொடிகளினால் இறக்காமல் இருப்பதற்கும் அதி கூடிய அளவு

சில வியாபாரிகளிடம் பாவனைக்கு உதவாத, பல வித தொற்று நோய்கள் பரவக் கூடிய உணவு வகைகள் காணப்படுவதாக இலங்கைச் செஞ்சிலுவைச்சங்க பருத்தித்துறை பிரிவு தொண்டர் குழு பருத்தித்துறை சுகாதார வைத்திய அதிகாரியிடம் புகார் செய்துள்ளது

நெல்லி இரசப் போத்தல்களையும் சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகத்தில் ஒப்படைத்துள்ளது இந் நெல்லிரசம் பாவனைக்குதவாதது என்பதும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது

(25)

# பிரிட்டனில் ஹெலி விபத்து 25 உயர் அதிகாரிகள் பலி

## சம்பவத்திற்கான காரணம் தெரியவரவில்லை

(லண்டன்)

வட அயர்லாந்து பாதுகாப்பு தொடர்பான மாநாடு ஒன்றில் கலந்து கொள்வதற்காக சென்று கொண்டிருந்த பிரிட்டிஷ் படை அதிகாரிகள் ஹெலிகப்டர் விபத்தில் சிக்கி உயிரிழந்துள்ளனர். ஸ்கொட்லாந்து அருகில் மலைப் பகுதியில் இவ்விபத்து நடைபெற்றுள்ளது.

இந்த இராட்சத ஹெலிகப்டரில் ஆறு வட அயர்லாந்து சிவில் அதிகாரிகள், ஒன்பது இராணுவ அதிகாரிகள் 10 மூத்த பொலிஸ் அதிகாரிகள் பயணம் செய்து கொண்டிருந்தனர். விபத்தில் இவர்கள் எவரேனும் உயிர்தப்பவில்லை இவர்களில் அநேகர் வட அயர்லாந்தில் தீவிரவாதிகளுக்கு எதிராக புலனாய்வு நடவடிக்கையில் ஈடுபட்டிருந்தவர்கள் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இவ்விபத்துக்கான காரணம் ஏதும் தெரிவிக்கப்படவில்லை விபத்து நடைபெற்ற இடத்தில் விசாரணைகள் நடைபெறுகின்றன.

## யெல்சின் கோரிக்கை

கொரியா தீபகற்பம் முழுவதும் அணு ஆயுதமற்ற பகுதியாக்குவதற்கு சர்வதேச மாநாடு ஒன்று கூட்டப்படும் வரை வட கொரியாவிற்கு எதிராக தடைகள் விதிக்கப்படக் கூடாதென்று ரஷிய அதிபர் போறிஸ்யெல்சின் தெரிவித்துள்ளார்.

## ஜே.கே.எல்,எப் தலைவர்; கொலை செய்ய முயற்சி

(புதுடில்லி)

ஜம்மு காஷ்மீர் விடுதலை முன்னணியின் தலைவர் யாசீம்மலிக்கை கொல்வதற்கு நேற்று முன்தினம் ஹிஸ்புல் முஜாகுதீன் என்ற போட்டிக் குழுவைச் சேர்ந்த தீவிரவாதிகள் செய்த முயற்சிகளிலிருந்து அவர் மயிரிழையில் உயிர் தப்பியதாக இந்திய வானொலி கூறியது.

தம்மை கடத்திச் செல்ல முஜாகுதீன்கள் முயன்றதாகவும் ஆனால் தமது ஆதரவாளர்கள் அதை தடுத்து விட்டதாகவும் அவர் கூறினார் இதைத் தொடர்ந்துஇவர்மீது முஜாகுதீன்கள் பலமுறை துப்பாக்கிப் பிரயோகம் செய்ததாகவும் ஆனால் அவரை மக்கள் சுற்றிவளைத்துக் கொண்டு விட்டதால் அவர் காயமின்றி தப்பினார் தமது உடைகள் கிழிந்து போயின என்றும் தமக்கு சிறுகாயங்கள் ஏற்பட்டன எனவும் மலிக் கூறினார்.

## பெற்ற வாக்கு விபரம்

(சென்னை)

மைலாப்பூர் தொகுதியில் வெற்றி பெற்ற அ.தி.மு.க. வேட்பாளர் பாலசுப்பிரமணியன் 40,756 வாக்குகளை பெற்றுள்ளார் தி.மு க. வேட்பாளர் ராமஜெயம் 35,021 வாக்குகளையும், காங்கிரஸ் வேட்பாளர் தியாகராஜன் 12,436 வாக்குகளையும், மறுமலர்ச்சி தி மு. க. வேட்பாளர் எஸ் தாணு 10,471 வாக்குகளையும் பெற்றனர்.

# அனல் காற்றின் வேகம் இந்தியாவில் தணியவில்லை

## பல பொதுமக்கள் மரணம்

(சென்னை)

வட இந்தியாவில் இன்னமும் வெப்பக்காற்று தணியவில்லை என செய்திகள் தெரிவிக்கின்றன.

நேற்று முன் தினம் வரை சுமார்பதினொன்றிற்கும்மேற்பட்டோர் வெப்பக்காற்றினால் இறந்துள்ளதாக அச் செய்திகள் தெரிவித்தன.

மத்திய பிரதேசத்தில் வெப்பம் காரணமாக 40 பேர் இறந்துள்ளனர் மாநிலத்தில் 45 இல் இருந்து 47 டிகிறி செல்சியஸ் வரை பதிவாகியுள்ளன.

உத்திரப் பிரதேஷ் டில்லி, பிகார், பஞ்சாப், கரியான, ஆந்திராப்பிரதேஷ், மத்திய மகாராஷ்டிராவில் வெப்ப நிலை நீடித்தது

## 4 மாணவர் மரணம்

(டில்லி)

இந்தியாவில் பீகார் மாநிலத்திலுள்ள பல்கலைக்கழகமொன்றில் மாணவர்கள் நடத்திய ஆர்ப்பாட்டத்தைக் கட்டுப்படுத்த பொலிசார் நடத்திய துப்பாக்கிச் சூட்டில் நான்கு மாணவர்கள் உயிரிழந்துள்ளனர்.

# தேர்தல் ஆணையக முடிவு எமக்கு அதிர்ச்சி தருகிறது

## வாழப்பாடி ராமமூர்த்தி தெரிவிப்பு

(சென்னை)

மைலாப்பூர் தேர்தல் முடிவுகளை வெளியிட தேர்தல் ஆணையகம் எடுத்த முடிவு தமக்கு அதிர்ச்சி அளித்துள்ளதாக தமிழக காங்கிரஸ் தலைவர் வாழப்பாடி ராமமூர்த்தி கூறினார்.

ஆளும் அ.தி மு க.வின் அதிகார துஷ்பிரயோகம், தேர்தல் ஒழுங்கீனம் குறித்த புகார்களை தேர்தல் ஆணையகம் உதாசீனம் செய்துள்ளது என அவர் கூறினார்.

## பாப்பரசர் - கிளின்டன் சந்திப்பு

விரைவில் வெளிநாடுகளுக்கு விஜயம் செய்யவுள்ள அமெரிக்க ஜனாதிபதி இத்தாலி சென்றதும் அங்கு பாப்பரசரை சந்தித்து உரையாடவுள்ளார்.

## மேல் மாகாணசபையில் அங்கம் வகிக்கும்

# சிறிமணியின் ஆதரவாளரை பதவி விலகக் கோரிக்கை

ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணியிலிருந்து மேல் மாகாணசபை உறுப்பினரும், திருமதி லலித்அணியின் ஆதரவாளருமான எதிரிவீர பிரேமரத்னா முன்னணியிலிருந்து விலக்கப்படுவதாக முன்னணியின் தேசிய நிர்வாக சபை முடிவு எடுத்து அறிவித்துள்ளது.

கட்சியிலிருந்து விலக்கப்பட்டதன் அடிப்படையில் அவர் மேல் மாகாண சபை உறுப்பினர் பதவியிலிருந்தும் நீக்கப்படவேண்டும் எனவும் அவரது இடத்திற்கு புதிய உறுப்பினர் ஒருவரை நியமிக்க வேண்டும் எனவும் ஜ. ஐ. தே. மு; தேர்தல்ஆணையாளரைக் கோரியுள்ளது-

முன்னாள் அமைச்சரான பி பி. ஜி. கலுகல்ல மற்றும் மொன்டி கோபல்லவ, சாமில பெரேரா, லால் குணசேகர போன்றோர் முன்னணியின் செயற் குழுவிலிருந்து விலக்கப்பட்டதைத் தொடர்ந்து பொதுஜன ஐக்கிய முன்னணிக்கு ஆதரவான மாகாணசபை உறுப்பினர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவது குறிப்பிடத்தக்கது-

முன்னணியின் பொதுச் செயலாளரான வடமேல் மாகாண முதல்வர் ஜி- எம். பிரேமச்சந்திரா இது பற்றிக் கூறுகையில், லலித் பிரிவை ஆதரிக்கும் சகல உறுப்பினர் மீதும் நடவடிக்கை எடுக்கப்படும் எனத் தெரிவித்தார்-

# முதல் தாக்குதலை அவர்கள் எம் மீது நடத்திவிட்டனர்

(கொழும்பு)

அவர்கள் இப்போது முதல் தாக்குதலை நடத்தி விட்டனர் இவ்வாறு ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணி லலித் பிரிவின் தலைவரான சி. வி குணரத்தின தெரிவித்தார். மேல் மாகாண சபை உறுப்பினர் எதிரிவீர பிரேமரத்னா மீதும் மற்றும் சில முன்னணியின் மாகாணசபை உறுப்பினர்கள் மீதும் எடுக்கப்பட்ட நடவடிக்கை தொடர்பாக இவ்வாறு தெரிவித்த அவர் மேலும் கூறுகையில்,

இப்போது நாங்கள் எம்மை பாதுகாக்க நிர்ப்பந்திக்கப்பட்டுள்ளோம். கடந்த ஞயிற்று நடைபெற்ற ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணியின் தேசிய நிர்வாகக் குழுக் கூட்டம் செல்லுபடியற்றது. எனவே அக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்களும் செல்லுபடியாகாதவையாகும் எனவும் தெரிவித்தார்

அத்துடன் தற்போது ஐ. ஐ தே. மு. நிர்வாகக் குழுவில் இடம்பெற்றுள்ளவர்கள் ஐ. தே. கவுடன் இணைப்பதற்கான முயற்சியில் ஈடுபட்டிருப்பதாகவும், இதைத் தாமும் தமது அணியினரும் திட்டவட்டமாக எதிர்ப்பதாகவும் தெரிவித்தார்.

நிறைவேற்று அதிகார முடைய ஜனாதிபதி ஆட்சி முறையையும், ஐ. தே. கவின் கொள்கைகளையும் எந்தவொரு ஜ. ஐ. தே. மு. வினரும் எதிர்க்க வேண்டும் எனவும் அதற்காகவே ஜ. ஐ. தே. மு. அமைக்கப்பட்டது எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

## எழுச்சி விழா

தெல்லிப்பழை கல்விக் கோட்ட மாணவர் எழுச்சி நாள் விழா நாளை (ஞாயிறு) பிற்பகல் 2 மணிக்கு மருதனார்மடம் மகாஜனாக் கல்லூரியில் நடைபெறும்.

## ஐ. தே. க

தில் வைத்து ஜனாதிபதியின் பாதுகாப்பு பிரிவினர் செய்தியாளர்கள் மற்றும் புகைப்படக்காரர்களுக்கும் அனுமதி வழங்க மறுத்துவிட்டனர். அத்துடன் மாநாட்டுப் பேச்சுக்களை ஒலிபரப்புவதற்காக பொருத்தப்பட்டிருந்த ஒலிபெருக்கிகளின் தொடர்புகளும் துண்டிக்கப்பட்டிருந்தன. இவற்றின் காரணமாக செய்தியாளர்களும் புகைப்படப் பிடிப்பாளர்களும், விறாந்தைகளில் அலைந்து திரிந்துள்ளனர்.

## யாழ். நகரப் பகுதியில் குடிநீர் பெறுவதில் சிரமம்

(குருநகர்)

குருநகர், பாசையூர், மற்றும் யாழ் நகர மக்கள் குடிநீர் பெறுவதற்கு பெரும் அசௌகரியங்களை அடைவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

அவ்வப்பகுதிகளில்சிறிய நீர்த்தாங்கிகள் மூலம் காலையில் இரு மணி நேரங்களும் மாலையில் ஒரு மணி நேரமும் குடிநீர் விநியோகிக்கப்பட்டு வருகிறது.

இவ் விதம் தேவையான குடிநீரைப் பெறுவதற்கு பல மணி நேரத்திற்கு முன்பாகவே ஒவ்வொரு நீர்க்குழாய்கள்முன்பகாவும்நீண்டவரிசையில்பாத்திரங்களை நிரையில் அடுக்கி வைத்துக் காத்திருக்கும் அவலம் கடந்த சில வருடங்களாக நீடித்துக் கொண்டிருக்கிறது

குருநகர், றெக்கிளமேசன் பகுதியில் இருக்கும் தண்ணீர்த் தாங்கி மற்றும் பிரதான வீதி தண்ணீர்த் தாங்கிகள் மூலம் நடைமுறைப்படுத்தப்பட்ட நீர் விநியோகம் கடந்த நான்கு வருடங்களாக தடைப்பட்டதை அடுத்தே மக்கள் குடிநீரைப் பெறுவதற்கு மிகுந்த அசௌகரியங்கள் அடைந்து வருகின்றனர்

(21)

## மக்களை பலியெடுக்கும் நீர்த்தடாகம்

## விசர் நோய் தடுப்பூசி

(யாழ்ப்பாணம்)

யாழ் மாநகர சபை சுகாதார வைத்திய அதிகாரி பிரிவினர் இன்று நாய்களுக்கு விசர் நோய்த் தடுப்பூசி மருந்து ஏற்றவுள்ளனர்-

இன்று முற்பகல் 8 மணி தொடக்கம் 10 மணி வரை நல்லூர் மாநகராட்சி மன்றத்திலும் பருத்தித்துறை வீதி சட்டநாதர் ச. ச. நிலையத்திலும் பிற்பகல் 10. 30 மணி தொடக்கம் 12. 30 மணி வரை அரியாலை கலைமகள் ச ச. நிலையத்திலும் அரியாலை திருமகள் ச. ச நிலையத்திலும் பிற்பகல் 2 மணி தொடக்கம் 4 மணி வரை செம்மணி வீதி பரதி ச. ச. நிலையத்திலும், நல்லூர் தெற்கு ச. ச நிலையத்திலும் ஏற்றப்படவுள்ளதாக யாழ் மாநகரசபை சுகாதார வைத்திய அதிகாரி தெரிவித்துள்ளார்- [பா]

## அதிபர், ஆசிரியர் கூட்டம்

சண்டிலிப்பாய் கல்விக் கோட்டப் பாடசாலை அதிபர்கள் கூட்டம் எதிர்வரும் திங்கட்கிழமை பிற்பகல் 2மணிக்கு மானிப்பாய் இந்துக் கல்லூரி மண்டபத்தில் கோட்டப் பிரதிக் கல்விப்பணிப்பாளர் திரு. த. துரைசிங்கம் தலைமையில் நடைபெறும்-

தெல்லிப்பழைக் கல்விக் கோட்டப் பாடசாலைகளில் இரண்டாம் ஆண்டில் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கான கலந்துரையாடல் ஒன்று எதிர்வரும் செவ்வாய்க்கிழமை பிற்பகல் 2 மணிக்கு மருதனார் மடத்தில் இயங்கும் யூனியன் கல்லூரியில் நடைபெறும்-

## ஆங்கில ஆசிரியர் தெரிவுப் பரீட்சை

(கொழும்பு)

ஆங்கில பாடம் போதிப்பதற்கான ஆசிரியர் தெரிவுப் பரீட்சை இம் மாதம் 11ம் திகதி சனிக்கிழமையன்று நடத்தப்பட இருப்பதாக பரீட்சைத் திணைக்களம் அறிவித்துள்ளது. சகல விண்ணப்பதாரிகளுக்கும் அனுமதி அட்டைகள் தபால் மூலம் ஏற்கனவே அனுப்பி வைக்கப்பட்டிருப்பதாகவும்மேலும் கூறப்படுகிறது.

## வீதிகள் செப்பனிடல்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாநகர சபையினரால் நகரப் பகுதியில் உள்ள பல வீதிகள் செப்பனிடும் வேலைகள் தீவிரமாக நடைபெற்று வருகின்றன

## பெறுவதில்லை இனிச் சீதனம் என்று புதுவிதி ஒன்று படைத்திடுவீர்

# நோயாளரை பார்வையிட வரிசையில் நின்றோர் பணம் பறிபோனது

[யாழ்ப்பாணம்]

யாழ். போதனா மருத்துவமனையில் நோயாளி ஒருவரை பார்க்க வந்த ஒருவர் தான் வைத்திருந்த பத்தாயிரம் ரூபா பணம் களவாடப்பட்டு விட்டதென தெரிவித்த புகாரை அடுத்து நேற்று நோயாளர்களை பார்வையிட சென்றோரும், பார்வையிட்டு திரும்பியவர்களும் கடுமையாக சோதனையிடப்பட்டனர்.

மேற்படி மருத்துவமனையில் ஐந்தாம் வாட்டில் இருக்கும் நோயாளியை பார்வையிட வந்த ஒருவர் உள்ளே செல்ல வரிசையில் நின்ற சமயம் தான் வைத்திருந்த பணத்தை யாரோ களவாடி விட்டார்கள் என புகார் செய்தார். இவரது புகாரை அடுத்து நோயாளிகளை பார்வையிட்டு திரும்பியோரும் சோதனைக் குள்ளாக்கப்பட்டனர். இது வழமைக்கு மாறான ஒரு செயல் என்பது குறிப்பிடத்தக்கது. வழமையாக உள்ளே செல்வோரது பொதிகள் சோதனைக் குள்ளாக்கப்பட்டு வந்தது எனினும் திருட்டுப் போனதாக கூறப்பட்ட பணம் மீட்கப்படவில்லை. (சி)

## நாளை

களால் உருவாக்கப்பட்ட கையெழுத்து நூல்கள் வெளியிடல் மற்றும் நிகழ்வுகள் இடம்பெறும்- மாலை கோட்டமட்டத்திலான நிகழ்வுகள் இடம்பெறும்-

இதேவேளை இம்மாணவ எழுச்சி நாளுக்கான ஆரம்ப ஏற்பாடுகளை யாழ் குடாநாட்டுப் பாடசாலைகள் கடந்த வாரத்தில் இருந்தே மேற்கொண்டுவந்துள்ளன

சகல பாடசாலைகளிலும் யூன் - 5 மாணவ எழுச்சி நாள் சம்பந்தமான கோசங்களைக் கொண்ட பதாகைகள் தொங்கவிடப்பட்டிருக்கின்றன அத்துடன் பாடசாலைகள் ரீதியாக மாணவர்கள் மாணவ எழுச்சி நாளை உணர்ச்சி பூர்வமாக கொண்டாட தம்மைத்தயார்படுத்தியுள்ளனர்

மேலும் இந்நிகழ்வை ஒட்டி மாணவர் இரவு நேரங்களில் ''எழுச்சி! எழுச்சி! மாணவர் எழுச்சி'' என்று கோசம் எழுப்பியவாறு செல்வதுடன் வீதி நிகழ்வுகளையும் நிகழ்த்தி வருகின்றனர் பிரதான வீதிகளிலும் கோசங்கள் பல எழுதப்பட்டுள்ளதையும் பதாகைகளும் தொங்கவிடப்பட்டுள்ளமையையும் அவதானிக்க முடிந்தது (பா)

## கருத்தரங்கு

உலக சுற்றாடல் தினமான நாளை சூழல் பாதுகாப்பு நிறுவனமும் யாழ். பல்கலைக்கழக புவியியற் கழகமும் இணைந்து நடாத்தும் சூழல் பற்றிய கருத்தரங்கு யாழ் பல்கலைக் கழக கைலாசபதி கலையரங்கில் பிற்பகல் 3.00 மணிக்கு நடைபெற ஏற்பாடாகியுள்ளது. இதில் அனைத்து மக்களையும்கலந்து கொள்ளுமாறு சூழல் பாதுகாப்பு நிறுவனத்தினரும் புவியியற் கழகத்தினரும் கூட்டாக வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

## பொலிஸ்

டன் விசாரணைக் குழுவிற்கு எதிர்க்கட்சிகளின் ஒத்துழைப்பை கோருவதற்கும் தேர்தலில் மனித உரிமைகளை முன்னேற்றுவதற்காக அரசாங்கம் கட்டிக்கொள்ள முற்படுகிறது எனவும் எதிர்க்கட்சிகள் கண்டித்துள்ளன.

## 4 வருட

வில்லை என்பதும் இதிலிருந்து தெரியவருகிறது.

வடக்கு-கிழக்கு இராணுவ நடவடிக்கை நடைபெறும் இடங்களில் கைது செய்யப்பட்டவர்களின் முற்றிலும் சரியான புள்ளிவிபரங்களைத் தம்மால் பெற முடியாது போனதை சுட்டிக்காட்டிய

## இருநேர

பாடசாலைத் திட்டத்துக்கு பலத்த ஆட்சேபங்களைத் தெரிவித்தனர்- இரு நேரப் பாடசாலைத் திட்டத்தால் தமக்கு ஏற்படும் சிரமங்கள் குறித்து மாணவர் பிரதிநிதிகளும், பெற்றோரும், ஆசிரியர்கள், அதிபர்கள் ஆகியோரும்உரை நிகழ்த்தினர்-

இவ்வாறு அனைத்துத் தரப்பிலும் ஆட்சேபம் தெரிவிக்கப்பட்டதைத் தொடர்ந்து இத் திட்டத்தை ஒத்திவைப்பதாக முடிவு செய்யப்பட்டது.

தற்போது இரு நேரங்களாக இயங்கும் பாடசாலைகள் நேரமாற்றம் செய்ய விரும்பும் பட்சத்தில் தமது

சாலைகளைச் சேர்ந்த மாணவர் பிரதிநிதிகள் இரு நேரப் பாடசாலைத் திட்டத்தை ஆட்சேபித்து உரைஆற்றினர்-

மேலும் யாழ்- இந்துக் கல்லூரி, யாழ்- இந்து மகளிர் கல்லூரி ஆகியவற்றின் பாடசாலை அபிவிருத்திச் சபை சார்பிலும் இத் திட்டத்தை ஆட்சேபித்து கருத்துக்கள் தெரிவிக்கப்பட்டது-

அடுத்ததாக ஆசிரியர்கள் சார்பில் யாழ்- இந்துக் கல்லூரி ஆசிரியரும், அதிபர்கள் சார்பில் கொக்குவில் இந்துக் கல்லூரி அதிபரும், ஊர்காவற்றுறை சென் அன்ரனிஸ் கல்லூரி அதிபரும் உரை நிகழ்த்தினர். இவர்கள் அனைவரும் இரு நேரப் பாடசா

## எழுச்சி விழா

கோப்பாய் கோட்டக் கல்வி அலுவலகம் நடாத்தும் மாணவர் தின எழுச்சி விழா யாழ் கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரி மண்டபத்தில் நாளை பிற்பகல் 2 00 மணிக்கு பிரதிக் கல்விப் பணிப்பாளர் திரு பொ. வீரபத்திரன் தலைமையில் நடைபெறும் கோப்பாய் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை அதிபர் திருமதி இராமநாதன் விடுதலைப் புலிகள் அமைப்பைச்சேர்ந்த திரு. அரசண்ணா ஆகியோர் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொள்வார்கள்.

தமிழ்மொழித்திறன் போட்டிகளில் வெற்றிபெற்றோருக்குப் பரிசில்களும், சான்றிதழ்களும் வழங்கப்படும். 1993 இல் 5ஆம் ஆண்டு பொதுத் தேர்வில் கோட்டமட்டத்தில் முதல் 10 இடம் பெற்றவருக்குச் சான்றிதழ்வழங்கப்படும் கலை நிகழ்ச்சிகள் பல இடம் பெறும்-

யாளர்களும் புகைப்படப் பிடிப்பாளர்களும், விறாந்தைகளில் அலைந்து திரிந்துள்ளனர்.

இதேவேளை கட்சியின் முக்கிய விவகாரங்கள் மற்றும் சர்ச்சைக்குரிய விடயங்கள் தொடர்பாக இம் மாநாட்டில் குறிப்பிட்டு உரையாற்றியதாகவும், கட்சியின் முக்கிய நடவடிக்கைகள் பத்திரிகைகளுக்கு கிடைப்பதை தடுக்கும் முகமாகவே செய்தியாளர்களுக்கு கதவடைப்பு செய்யப்பட்டிருப்பதாக ஐ தே. கவின் சிரேஷ்ட வட்டாரங்கள் கூறியுள்ளன.

## மக்களை பலியெடுக்கும் நீர்த்தடாகம்

(வவுனியா)

வவுனியா வாவியில் கழிவு நீர் சுத்திகரிப்பிற்கென கட்டப்பட்ட நீர்த்தடாகமொன்று பலியெடுத்து வருகின்றது.

மாதாமாதம் இந்த தடாகத்தில் இளைஞர்கள் பலியாகுவது வழமையாகியுள்ளதாம் தடாகத்தில் குளிப்பது உடலுக்கு உகந்தது அல்ல என்கின்ற எச்சரிக்கை அறிவிப்புப் பலகை இருந்த போதும் மக்கள் நீராடுகின்றனர்

இதுவரை நால்வரை இத்தடாகம் பலியெடுத்துள்ளது ஒரு பல்கலைக் கழக மாணவனும் ஒரு பாடசாலை மாணவனும் இதில் அடங்குவர்.

இளைஞர்களைப் பலியெடுக்கக் கட்டப்பட்ட தடாகம் தான் இது என அப்பகுதி மக்கள் பேசிக்கொள்கின்றனர்.

கடந்த மாதம் ஒரு வயோதிபர் அடித்துக் கொலை செய்யப்பட்டு அவரது சடலம் கூட இந்த தடாகத்தில் மிதக்கக் காணப்பட்டது.

எனவே தான் குறிப்பிட்ட தடாகம் கண்காணிப்பிற்கு உள்ளாக்கப்பட வேண்டும் என கூறப்பட்டுள்ளது.

யாழ். மாநகர சபையினரால் நகரப் பகுதியில் உள்ள பல வீதிகள் செப்பனிடும் வேலைகள் தீவிரமாக நடைபெற்று வருகின்றன

நீண்ட காலமாக செப்பனிடப்படாமல் இருந்த இந்த வீதிகள் யாவும் திருத்தம் செய்யப்படுகின்றன

சில வீதிகள் பயணிகளின் நன்மை கருதி இரண்டாம் தடவையாக திருத்தப்படுகின்றன. (தி)

## திருட்டு

(வடமராட்சி)

பருத்தித்துறை பிரதான வீதியில் உள்ள பாதணி விற்பனை நிலையத்தில் நேற்று முன்தினம் இரவு இனம்தெரியாதவர்களால் பெறுமதியான பாதணிவகைகள், பாக் வகைகள் என்பன திருடப்பட்டுள்ளன இத்திருட்டு தொடர்பாக பருத்தித்துறை காவல்துறையில் புகார் செய்யப்பட்டதையடுத்து காவல்துறையினர் ஸ்தலத்திற்கு விரைந்து விசாரணைகளை மேற்கெண்டனர்

நடவடிக்கைகள் நடைபெறும் இடங்களில் கைது செய்யப்பட்டவர்களின் முற்றிலும் சரியான புள்ளிவிபரங்களைத் தம்மால் பெற முடியாது போனதை சுட்டிக் காட்டிய அந் நிறுவனம் தற்போது அம் முழு விபரத்தையும் பெறுவதற்கான நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளதாக அந் நிறுவன வட்டாரங்களில் இருந்து தெரிய வருகின்றது.

கொழும்பில் இரவு வேளைகளில் சுற்றிவளைப்பின்போது அநேகர் கைது செய்யப்பட்டதாகவும் இவர்கள் ஏதோ ஒரு காரணத்தை முன்னிட்டு அங்கு வாழ்ந்து வருவதாகவும் எனவே சாதாரண வாழ்வுக்கு அங்கு இடையூறு ஏற்படுவதாகவும் அவ்வட்டாரங்கள் மேலும் தெரிவித்தன

திட்டத்தை ஒத்திவைப்பதாக முடிவு செய்யப்பட்டது.

தற்போது இரு நேரங்களாக இயங்கும் பாடசாலைகள் நேரமாற்றம் செய்ய விரும்பும் பட்சத்தில் தமது பாடசாலை அபிவிருத்திச் சபை, அதிபர், ஆசிரியர், பெற்றோர் ஆகியோருடன் கலந்தாலோசனை செய்து எடுக்கப்படும் முடிவு குறித்து கோட்டக்கல்வி அலுவலகத்துக்கு அறிவித்த பின்னர் நேர மாற்றம் செய்யலாம் என்றும் இக் கூட்டத்தின் இறுதியில் தெரிவிக்கப்பட்டன-

நேற்றைய கூட்டத்தில் மாணவர்கள் சார்பில் யாழ்- இந்துக் கல்லூரி, யாழ்- இந்து மகளிர் கல்லூரி, யாழ் மத்திய கல்லூரி, புனித சாள்ஸ் மகா வித்தியாலயம், யாழ்ற்ரன் கல்லூரி ஆகிய பாட சாலைகள் சார்பில் கொக்குவில் இந்துக் கல்லூரி அதிபரும், ஊர்காவற்றுறை சென் அன்ரனிஸ் கல்லூரி அதிபரும் உரை நிகழ்த்தினர். இவர்கள் அனைவரும் இருநேரப் பாடசாலைத் திட்டத்தை ஆட்சேபித்தும் ஒரு நேரப் பாடசாலைத் திட்டத்தைக் கோரியும் பல்வேறு வகையில் விளக்கமளித்தனர்-

இதைத் தொடர்ந்து இவ் விடயம் குறித்து குழு நிலை ஆலோசனைக்காக கல்விப் பணிப்பாளரும் ஏனையோரும் அலுவலக அறையினுள் கூடினார்கள்- சுமார் 15நிமிட ஆலோசனையின் பின்னர் மேற்படி முடிவை கல்விப் பணிப்பாளர் செல்வி பெரியதம்பி மாணவர்களின் பலத்த கரகோசத்துக்கு மத்தியில் அறிவித்தார்- [க][ச][நி]


## தனியார் கல்வி நிறுவன ஒன்றியம்
### யாழ். மாவட்டம்
## முக்கிய அறிவித்தல்

எதிர்வரும் 5-6-94ஆம் திகதியன்று நடைபெறும் மாணவர் எழுச்சி நாளில் சகல தனியார் கல்வி நிறுவனங்களையும் மூடி ஒத்துழைப்பு வழங்குமாறும் அன்றைய தினம் நடைபெறும் மாணவர் எழுச்சி நாள் நிகழ்ச்சிகளில் சகலரையும் கலந்து கொள்ளுமாறும் அன்புடன் கேட்டுக் கொள்கிறோம்.

பொதுச் செயலாளர்
தனியார் கல்வி நிறுவன ஒன்றியம்
யாழ். மாவட்டம்.

(சி- 9594)


### பிரச்சினைக்கு

எந்த ஒரு உருப்படியான தீர்வுத் திட்டமும் முன் வைக்கப்படவில்லை. இந்நிலை நீடிக்குமானால் நான் ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடுவது தவிர்க்க முடியாத தாகிவிடும் என அஷ்ரப் மேலும் தெரிவித்தார்.

### இடைமெயர்ந்து

ஆரம்பிக்கப்படவுள்ளதாகவும், இதற்கான அனுமதி விரைவில் பாராளுமன்றத்தில் பெறப்படும் எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

### சிறிமா

யாக வழங்கவேண்டும் என நீதிமன்றம் தீர்ப்பளித்திருந்தது.

ஜனாதிபதி பிரேமதாசா கொல்லப்பட்டபின் அப்பணத்திற்கு உரிமையாளரான ஹேமா பிரேமதாசா, இப் பணத்தை தாம் பெற்றுக்கொள்ளப் போவதில்லை என அறிவித்துள்ளார் என தெரியவருகிறது.


## கம இரசாயன வாணிபர் சங்க
## விசேட பொதுக் கூட்டம்

கம இரசாயன வாணிபர் சங்கத்தின் விசேட பொதுக் கூட்டம் உப விதிகள் அங்கீகாரத்திற்காக 5-6-94 ஞாயிற்றுக்கிழமை காலை 9.00 மணிக்கு திருநெல்வேலி விவசாயப் பாடசாலை மண்டபத்தில் நடைபெற உள்ளது. கம இரசாயன வாணிபர்கள் அனைவரும் தவறாது சமுகமளிக்கவும்.

கம இரசாயன வாணிபர் சங்கம்

[8476]



யாழ் ஸ்ரீதரில்
புரூஸ்லி நடித்த
GAME OF DEATH
தினசரி பி. ப. 4 00 மணி, 6.00 மணி
சனி, ஞாயிறு காலை 10 30 மணி
பி. ப. 4 மணி, 6 மணி
தினசரி பி ப. 2 30 மணி காட்சி மட்டும்
ஏப்ரல் 94
ஒளிவீச்சு
(சி-9570)


### கலந்துரையாடல்

3 00 மணிக்கு வலிகாமம் வர்த்தகர்களுக்கான கலந்துரையாடலும் நல்லூர் இளம் கலைஞர் மண்டபத்தில் நடைபெறும் என யாழ் மாவட்ட அரசியல் துறை செயலகம் அறிவித்துள்ளது.


## மாணவர் எழுச்சி நாள் - யூன 5

வடமராட்சி நெல்லியடியில் மாலை 3-00 மணி

**College of Neptunes**
சார்பாக

### மாபெரும் பட்டி மன்றம்

**தமிழீழம் மீதான பிரதான ஆக்கிரமிப்பாளர்**
**இந்தியாவா? இலங்கையா?**

| இந்தியா | இலங்கை |
| --- | --- |
| திரு. S. வரதராஜன் | திரு. R. செல்வவடிவேல் |
| திரு. S. கணேஷ் | திரு. S. மகேந்திரன் |
| திரு. T. வேல்நம்பி | திரு. செல்வமனோகரன் |

நடுவர்: திரு. A. குமாரவேல்

மேலும் பல கலை நிகழ்வுகள் நடைபெறும். அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம.

நெப்ரியூன்ஸ்
மாணவர்கள், ஆசிரியர்கள்

(சி-9583)



இப் பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி, 31ஆம் இலக்கத்திலுள்ள ஈழநாதம் பணிமனையில் 1994 ஆம் ஆண்டுஜூன் மாதம் 04 ஆம்திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது